

# مجالات العبادة في الإسلام

# இஸ்லாம் கூறும் வணக்க வழிபாடுகள்

باللغة التاميلية

# இஸ்லாம் கூறும் வணக்க வழிபாடுகள்

மூலம்

யூசுப் அல் கர்ளாவி

தமிழில்

முஹம்மத் உனைஸ்

மேற்பார்வை

அப்துல் அஸீஸ் ஷாஜஹான்

ⓒ دار الورقات العلمية للنشر والتوزيع، ١٤٢٥هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

القسم العلمي بالدار
مجالات العبادة في الإسلام./ القسم العلمي بالدار؛
محمد أنيس صلاح الدين.- الرياض، ١٤٢٥هـ
٦٨ ص؛ ١٢ × ١٧ سم
ردمك: ٠ - ٠ - ٩٥٤٩ - ٩٩٦٠
(النص باللغة التاميلية)
١- العبادات (فقه إسلامي) أ. صلاح الدين، محمد أنيس (مترجم) ب- العنوان
ديوي ٢٥٢ ١٤٢٥/٣٢٦٦

رقم الإيداع: ١٤٢٥/٣٢٦٦
ردمك: ٠ - ٠ - ٩٥٤٩ - ٩٩٦٠

**حقوق الطبع محفوظة**

**الطبعة الأولى**
**١٤٢٥هـ - ٢٠٠٤م**

بسم الله الرحمن الرحيم

**முன்னுரை**

எல்லாப்புகழும் வல்ல நாயன் அல்லாஹ்வுக்கே உரித்தானதாகும். அவனை மனமாறப் புகழ்ந்து அவனிடமே நாம் மேற்கொள்ளும் காரியங்களில் வெற்றி பெற உதவியையும், தயவையும் வேண்டுகின்றோம். மேலும் நமதுள்ளங்கள் ஏற்படுத்துகின்ற தீங்குகளை விட்டும் நம்மைப் பாதுகாக்குமாறு அவனிடமே பாதுகாப்பும் தேடுகின்றோம். அவன் இவ்வுலகில் யாருக்கெல்லாம் நேர்வழி காட்டுகின்றானோ அவர்களை அவனைத்தவிர வேறு எவராலும் வழிகெடுத்திட முடியாது. மேலும் அவன் யாருக்கெல்லாம் வழிகேட்டை எழுதி வைத்திருக்கின்றானோ அவர்களை அவனைத்தவிர வேறு எவராலும் நேர்வழிப்படுத்திடவும் முடியாது. சாந்தியும், கருணையும் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

அன்பார்ந்த சகோதரர்களே!

இஸ்லாமியர்களாகிய நாம் இறைவனை தினமும் தொழுது வணங்கி வருகின்றோம். அது மட்டுமின்றி அவனது கட்டளைகளென இருக்கும் நோன்பு, ஸகாத், உம்றா, ஹஜ், பிரார்த்தனை, நேர்ச்சை, சுவனத்துக்கு ஆதரவு வைத்தல், நரக நெருப்பைப் பயந்திருத்தல், திக்ரு செய்தல் போன்ற வணக்கங்களையும் கடைபிடித்து வருகின்றோம். அவைகளை நிறைவேற்றுவதன் மூலம் அவனுக்கு நெருக்கமானவர்களில் உள்ளவர்களாகவும் ஆக நினைக்கின்றோம். நமது வணக்கங்களும், முயற்சிகளும், எண்ணங்களும் பாராட்டப்பட வேண்டியவைகள்தான். என்றாலும் நாம் வணக்கம் என்ற பெயரில் அவைகளை மாத்திரம் கற்பனை செய்து கொண்டிருக்கின்றோமே அதுதான் கவலைக்குரியதாகும்.

ஏனெனில் நாம் நினைப்பது போன்று அவைகள் மாத்திரமல்ல இஸ்லாம் கூறும் வணக்க வழிபாடுகள். மாறாக நமது இம்மை, மறுமை சம்பந்தப்பட்ட அனைத்து நடைமுறைகளும், அவைகள் இஸ்லாம் கூறும் சட்டதிட்டங்களாக இருந்தாலும் சரி

தான், அல்லது நமது அன்றாட தேவைகளாக இருந்தாலும் சரி தான், அல்லது தொழில்களாக இருந்தாலும் சரிதான், அல்லது தனது சமுதாயத்துக்குச் செய்யும் தொண்டுகளாக இருந்தாலும் சரிதான், அல்லது தனது வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ள மேற்கொள்ளும் சிறுசிறு வேலைகளாக இருந்தாலும் சரிதான் அவையனைத்தும் அல்லாஹ்வுக்கென்ற தூய எண்ணத்தோடு செய்யப்படுமேயானால் அவைகளையும் இஸ்லாம் வணக்கம் என்றே போதித்துக் கொண்டிருக்கின்றது.

அவைகளைத் தெளிவுபடுத்தவே உங்களின் கைகளில் இச் சிற்றேடு தவழ்ந்து கொண்டிருக்கின்றது. அத்தோடு இறை வணக்கம் என்ற சொல் எவைகளையெல்லாம் உள்ளடக்கியிருக் கின்றது? என்ற கருப்பொருளையும் மிகவும் தெளிவாக உங்க ளுக்கு எடுத்துக் கூறயிருக்கின்றது.

எனவே நீங்களும் இச்சிற்றேட்டை சிறந்த முறையில் வாசித்து இறைவணக்கம் என்ற சொல் எவைகளையெல்லாம் உள்ளடக்கியிருக்கின்றது? என்பவைகளை அறிந்து அதன்பிரகா ரம் நடக்க முயற்சி செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் நம் மனைவருக்கும் மார்க்கத்தில் சிறந்த விளக்கத்தைத் தந்தருள் வானாக! மேலும் இஸ்லாம் கூறும் வணக்கங்களை அறிந்து அதன் பிரகாரம் நமது வாழ்வை அமைத்துக் கொள்ளவும் நல் லருள் புரிவானாக!

ஆசிரியர்.

**இறைவணக்கம்.**

இப்பூவுலகில் அல்லாஹுத்தஆலா நம்மைப் படைத்திருக்கின் றான். அத்தோடு நாம் வாழ்வதற்குரிய அனைத்து வாய்ப்பு வசதி களையும் அமைத்துத் தந்துமிருக்கின்றான். அப்படிப்பட்ட நாய னையே வணங்கி வழிப்பட வேண்டும் என்ற உண்மையை மனி தர்களில் இஸ்லாமியர்கள் மாத்திரமே தெளிவாக அறிந்து வைத்திருக்கின்றார்கள்.

அல்லாஹ்வை வணங்குவதற்காகத்தான் அவன் நம்மைப் படைத்திருக்கின்றான் என்பதை அறிந்து வைத்திருக்கும் நாம், அதனோடு தொடர்புடைய இன்னும் சில விஷயங்களையும் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதுதான் நாம் அவனுக்குச் செய்ய வேண்டிய வணக்கங்களை எவ்வாறு செய் வது? அதற்குரிய விதிமுறைகள் யாவை? இறைவணக்கம் எனப்படும் சொல் என்ன வணக்கங்களையெல்லாம் உள்ளடக்கியி ருக்கின்றது? என்பவைகளாகும். அதனை வேறுவிதத்தில் கூறு வதென்றால் அல்லாஹ்வை வணங்கி எவைகளைக் கொண்டு வணங்கி வழிப்படுவது? எனக்கூறலாம். மேற்கூறப்பட்ட கேள்விக ளுக்குரிய சரியான விடைகளை ஒருவன் அறிந்து செயல்படும் போதுதான் அவன் செய்யும் வணக்கத்தை சிறந்த முறையில் நிறைவேற்ற முடிகின்றது என்ற உண்மை நமக்குத் தெரிய வருகின்றது.

அல்லாஹுத்தஆலாவை மனதார நேசிப்பதோடு அவனையே வணங்கி வழிப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் இம் மனித சமுதாயத்தை அவன் படைத்திருக்கின்றான் எனின், நாம் எவ்வாறு அவன் கூறும் வணக்கங்களை விரும்பி அவனுக் கென்ற முழுமனதோடு நிறைவேற்ற வேண்டும்? என்பதை அறிந்து கொள்வதும் நம் ஒவ்வொருவர் மீதும் கட்டாயக் கட மையாகின்றது. எனவே அவ்வணக்கங்களை எவ்வாறு நிறை வேற்றுவது? என்ற சில கேள்விகளும், சிந்தனைகளும் நமக்குள் எழும்போது இறைவணக்கம் எவைகளையெல்லாம் உள்ளடக் கியிருக்கின்றது? அது எவைகளையெல்லாம் வணக்கம் எனப்

போதித்துக் கொண்டிருக்கின்றது? என்றதோர் முக்கியமான விஷயம் நம் சிந்தனைக்கு தட்டுப்படுகின்றது. இஸ்லாம் கூறும் இறைவணக்கத்தை நாம் எடுத்து நோக்கும்போது அதனை முக்கிய இருபகுதிகளாக வகைப்படுத்தலாம்.

1. இறைவணக்கம் என்ற சொல் இஸ்லாமிய சட்ட, திட்டங்களையும், மனிதனது வாழ்வு சம்பந்தப்பட்டவைகளையும் உள்ளடக்கியிருக்கின்றது.
2. இறைவணக்கம் என்ற சொல் மனிதனோடு தொடர்புடைய அந்தரங்கமான, பகிரங்கமான விஷயங்களையும் உள்ளடக்கியிருக்கின்றது.

இவ்விரு பகுதிகளையும் கீழ்வரும் பகுதிகளில் சற்று தெளிவாகவும், விரிவாகவும் பார்ப்போம்.

**இறைகட்டளைகள் அனைத்தும் வணக்கமாகும்.**

இஸ்லாம் கூறும் அனைத்து சட்டதிட்டங்களும் வணக்கங்களாகும். அதனைத் தெளிவுபடுத்தும் முகமாகவே அல்லாஹுத்தஆலாவும் பின்வருமாறு கூறிக்கொண்டிருக்கின்றான். மனிதர்களே! உங்களுடைய இரட்சகனை நீங்கள் வணங்குங்கள்(*2.21*).

மேற்கூறப்பட்ட திருவசனத்தைப் பற்றியும், அதுகூறும் வணக்கங்களைப் பற்றியும், அதன் வகைகளைப் பற்றியும், மார்க்கத்தின் அனைத்துச் சட்டதிட்டங்களும் அவ்வசனத்திலே உள்ளடக்கப்பட்டிருக்கின்றதா? என்பதைப் பற்றியும் அறிஞர் இப்னு தைமியா அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கவர்கள் விடையளிக்கையில், வணக்கம் என்பது மனிதன் என்ன நோக்கங்களை முன்வைத்து படைக்கப்பட்டானோ அவையனைத்தும் வணக்கங்களாகும் என சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறினார்கள்.

அவர் தொடர்ந்து கூறுகையில், வணக்கம் என்பது அல்லாஹுத்தஆலா விரும்பக்கூடிய மனிதனது அனைத்து அந்தரங்க, வெளிரங்க சொல், செயல்களையும் உள்ளடக்கியிருக்கின்றதெனக் கூறுகின்றார்கள். அதனடிப்படையில் அவன் தினமும் நிறைவேற்றி வரும் ஐநேரத் தொழுகையும், வருடத்துக்கொரு

முறை வழங்கிவரும் ஏழை வரியும், வருடத்தில் ஒருமுறை வைக்கப்படும் நோன்பும், வசதியும், சக்தியும் படைத்தவர்கள் மக்கா நகர் சென்று நிறைவேற்றி வரும் ஹஜ்ஜும் இறை வணக்கத்தில் உள்ளவைகளாகும்.

மனிதனிடம் காணப்படக்கூடிய சிறந்த பண்பாடுகளான உண்மை பேசுதல், பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படும்போது அவைகளைப் பாதுகாத்து நிறைவேற்றிக் கொடுத்தல், பெற்றோருக்குக் கட்டுப்பட்டு அவர்களுக்குப் பணிவிடை செய்தல், தன்னுடனான உறவைத் துண்டித்து நடக்கும் உறவினர்களைச் சேர்ந்து நடத்தல், வாக்குறுதிகளை நிறைவேற்றல் போன்றவைகளும் வணக்கத்தில் உள்ளவையாகும்.

மேலும் தனது இஸ்லாமிய சகோதரர்களுக்கு நல்லதைக் கற்றுக் கொடுப்பதும், அவர்கள் கெடுதிகள் செய்து கொண்டிருந்தால் அக்கெடுதிகளை விட்டும் அவர்களைத் தடுப்பதும், இறைநிராகரிப்போருக்கும், நயவஞ்சகர்களுக்கும் எதிராக போர் செய்வதும், பக்கத்து வீட்டார், அநாதைகள், ஏழைகள், வழிப் போக்கர்கள் போன்றோருடன் அன்பாய் நடந்து கொள்வதும், மிருகங்கள், பறவைகள், ஊர்வனங்கள் போன்ற வாய்பேச முடியாத உயிரினங்களுக்கு பரிவுகாட்டுவதும், அல்லாஹுத்தஆலாவிடமே தமது தேவைகளைக் கேட்டுப் பிரார்த்தித்துப் பெற்றுக் கொள்வதும், அவனைத் திக்ரு செய்வதும், கல்வி கற்றுக் கொள்வதும் வணக்கத்தில் உள்ளவையாகும்.

அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நேசித்தல், அவனது தண்டனைகளைப் பயந்து தான் செய்த பாவங்களுக்கு அவனிடம் பிழை பொறுக்கத் தேடுதல், மார்க்க சட்ட, திட்டங்களை அவனுக்காகவே செய்தல், அவன் கூறும் சட்ட, திட்டங்களை சிரமேற்கொண்டு நடைமுறைப்படுத்தல், அவன் தனக்களித்த அருட்கொடைகளை நினைத்து அவைகளுக்கு நன்றி செலுத்தல், தனக்கேற்படும் நலவு, நஷ்டம் இன்ப, துன்பம் போன்றவைகளனைத்தும் அவனது ஏற்பாட்டின் பிரகாரமே நடக்கின்றன என்பதையுணர்ந்து மனமாற ஏற்றுக் கொள்ளல், அவனிடமே

தமது காரியங்களை ஒப்படைத்தல், அவனது அருளையும், சுவனத்தையும் ஆசித்து, அவனது நரக நெருப்பைப் பயந்து வாழ்தல் போன்றவைகளும் வணக்கத்திலுள்ளவைகளாகும் எனக் கூறுகின்றார்கள்.

இமாம் இப்னு தைமியா அவர்கள் கூறியது போன்று இறை வணக்கம் விரிவான ஒன்றாயிருப்பதுடன், இஸ்லாத்தில் செய்யப் பட வேண்டிய கட்டாயக் கடமைகளும், அடிப்படைகளுமான தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்றவைகளையும் உள்ளடக்கியிருக்கின்றது.

அதேபோன்று கட்டாயக் கடமைகளின்றி நன்மையைக் கருத்திற் கொண்டு செய்யப்படும் தியானம், பிரார்த்தனை, பாவ மன்னிப்புக் கேட்டல், சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லல்லாஹ் போன்ற வார்த்தைகளைக் கொண்டு தியானித்தல் போன்றவைகளும் வணக்கத்தில் உள்ளவையாகும்.

அதேபோன்று சிறந்த பண்பாடுகள் என்ற அடிப்படையில் காணப்படக் கூடிய பெற்றோர்களுக்குக் கட்டுப்பட்டு பணிவிடை செய்தல், உறவினர்களைச் சேர்ந்து நடத்தல், அநாதை, ஏழை, வழிப்போக்கர் போன்றவர்களுக்கு உதவி ஒத்தாசையாக இருத்தல், பலவீனர்களோடு அன்பாய் நடந்து கொள்ளல், மிருகங்கள், பறவைகளோடு அன்பாய் நடந்து கொள்ளல் போன்றவையும் வணக்கத்திலுள்ளவையாகும்.

மேலும் மனிதர்களது சிறப்பம்சங்களாகவும், நற்குணங்களாகவும் காணப்படக்கூடிய உண்மை பேசுதல், பொறுப்புக்களை நிறைவேற்றிக் கொடுத்தல், வாக்குகளைக் காப்பாற்றுதல் போன்றவைகளும் வணக்கத்தில் உள்ளவைகளாகவே கருதப்படுகின்றன.

அதேபோன்று இறைவனோடு தொடர்புடையவைகள் என்ற அடிப்படையில் இருக்கும் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நேசித்தல், அவனைப் பயப்படல், நாம் மேற்கொள்ளும் வணக்கங்களை அவனுக்கென்ற தூய எண்ணத்துடன் செய்து வருதல், நாம் செய்த தவறுகளுக்கு அவனிடம் பாவமன்னிப்புக்

கேட்டல், அவனது சட்ட, திட்டங்களை பொறுமையாய் ஏற்றுக் கொள்ளல், அவன் தனக்களித்த அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துதல், அவனது அனைத்து ஏற்பாடுகளையும் மனதார ஏற்றுக் கொள்ளல் போன்ற அனைத்தும் இஸ்லாமிய வணக்கத் திலுள்ளவையாகும் என்பது தெளிவாகின்றது.

மேற்கூறப்பட்டவைகள் அனைத்தும் வணக்கங்கள் என் பதை அறிந்து கொண்ட நாம் அவைகளில் மிகவும் முக்கிய மானதாகவும், ஒவ்வொருவர் மீதும் கட்டாயக் கடமையானது மாகக் கருதப்படக்கூடிய இரு வணக்கங்களைப் பற்றி அறிந்து கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம். அவைகள் முறையே:

1. நல்லதை ஏவி தீயதைத் தடுத்தல்.
2. இறைநிராகரிப்பாளர்களுக்கும், நயவஞ்சகர்களுக்கும் எதிராகப் போர் தொடுத்தல் என்பவைகளாகும்.

இப்னு தைமியா அவர்கள் வேறோர் இடத்தில் கூறுகையில், நமது இப்பூவுலக வாழ்க்கையில் இஸ்லாம் நமக்குக் கூறும் அறிவுரைகளை கடைபிடித்து வருவதுடன், அவ்வறிவுரை களை நடைமுறைப்படுத்துவதற்கு என்னனென்ன வழிமுறைக ளையும், காரணங்களையும் அல்லாஹுத்தஆலா ஏற்படுத்தியிருக் கின்றானோ அவைகளையும், அவைகளுக்குரிய அடிப்படைகளை யும் பின்பற்றி நடப்பது அவசியமாகும். எனவே அல்லாஹ்வை வணங்குவதற்குரிய வழிமுறைகளாக, அடிப்படைகளாக எவைக ளையெல்லாம் அவன் நியமித்திருக்கின்றானோ அவைகளும் வணக்கங்களாகும். இவ்வாறாக நாம் செய்துவரும் ஒவ்வொரு செயலையும் எடுத்து நோக்கினால் அவைகளில் நல்லவைகளாக காணப்படக்கூடிய அனைத்தும் அல்லாஹ்வுக்குச் செய்யும் வணக்கங்களாகவே கருதப்படுகின்றன. அப்படியென்றால் வணக் கம் என்ற சொல் எல்லா வகையிலும் அல்லாஹ்வின் கட்டளைக ளுக்கும், சட்ட, திட்டங்களுக்கும் அடிபணிந்து, வழிப்பட்டு நடப்பதையே குறிக்கின்றது எனக்கூறுகின்றார்கள்.

**மனித வாழ்வும் வணக்கமாகும்.**

முன்னய பகுதிகளில் இமாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் கூறியது போன்று மார்க்கம் கூறும் அனைத்து விஷயங்களும் வணக்கத்திலுள்ளவை என்பதையும், அல்லாஹ்வின் எதிர்பார்ப்பிற்கிணங்க மனிதனது வாழ்க்கையும், நடவடிக்கைகளும் எவ்வாறு இருக்க வேண்டும்? என்பதனை தெளிவுபடுத்தத்தான் இம்மார்க்கம் வந்திருக்கின்றது என்பதையும் அறிந்துகொள்ளும் ஒருவன் அவனது அன்றாட வாழ்வில் நடக்கும் எல்லா விஷயங்களும் இறைவணக்கத்திலுள்ளவை என்பதை புரிந்து கொள்கின்றான். அந்த அடிப்படையில் அவன் எவ்வாறு உண்ண வேண்டும்? எவ்வாறு குடிக்க வேண்டும்? எவ்வாறு மல, சலம் கழிக்க வேண்டும்? என்பவைகளிலிருந்து எவ்வாறு நாட்டைக் கட்டியெழுப்புவது? எவ்வாறு ஆட்சி செய்வது? எவ்வாறு பணம் சம்பாதிப்பது? எவ்வாறு கொடுக்கல், வாங்கல் செய்வது? எவ்வாறு தண்டனைகள் வழங்குவது? யுத்தத்திலும், சமாதானத்திலும் எந்த அடிப்படையில் நடந்து கொள்வது? என்பவைகளையும் இவை போன்றவைகளையும் அம்மார்க்கம் தெளிவுபடுத்தியிருக்கின்றது என்பதையும் அறிந்து கொள்கின்றான்.

அதனால்தான் மனித சமுதாயத்துக்கு வழிகாட்டியாக வந்த அல்லாஹுத்தஆலாவின் இறுதி வேதமான அல்குர்ஆன் மனிதன் தனது அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் செய்து வருபவைகளையும், அவை தவிர்ந்த மார்க்க சட்ட, திட்டங்களையும் அவைபோன்ற இன்னோறன்ன விஷயங்களையும் ஒரே அத்தியாயமான சூரத்துல் பகராவில் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றது. மேலும் உங்களுக்கு நாம் கடமையாக்கியிருக்கின்றோம் என்ற வசனத்தின் மூலம் அவைகளனைத்தும் வணக்கங்கள் என்பதையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. அல்குர்ஆன் கூறும் அவ்வசனங்களை இங்கே சற்று எடுத்து நோக்குவோம். அல்லாஹுத்தஆலா கூறுகின்றான். விசுவாசங் கொண்டோரே! கொலையுண்டவர்கள் விஷயத்தில்(பகரமாக)பழி வாங்குவது உங்கள்மீது விதிக்கப்பட்டுள்ளது(2.178). மேலும்

கூறுகின்றான். (விசுவாசிகளே!) உங்களில் ஒருவருக்கு மரணம் நெருங்கும்போது அவர் பொருளை விட்டுச் செல்வாரானால் (அவர் தன்னுடைய) பெற்றோருக்கும், பந்துக்களுக்கும் முறைப் படி (மரண) சாசனம் செய்வது உங்கள் மீது விதிக்கப்பட்டுள் ளது(2.180). மேலும் கூறுகின்றான். விசுவாசங் கொண்டோரே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந் தது போல் உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக் கப்பட்டிருக்கின்றது. (அதனால்) நீங்கள் (உள்ள சுத்தி பெற்று) பயபக்தியுடைவர்களாகலாம்(2.183). மேலும் கூறுகின்றான். (விசுவா சிகளே! இஸ்லாத்தைக் காக்கும் பொருட்டு) போர் செய்வது அதுவோ உங்களுக்கு வெறுப்பாக இருக்க உங்கள்மீது கட மையாக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு பொருளை அது உங்க ளுக்கு நன்மையாக இருக்க(அதை)நீங்கள் வெறுக்கலாம்(2.216).

மேற்கூறப்பட்ட திருவசனங்களில் கூறப்பட்டிருக்கும் பழிக் குப்பழி எடுப்பதையும், தான் மரணிக்கும்போது தனது பெற்றோ ருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கும் மரண சாசனம் செய்து வைப்பதையும், நோன்பு காலங்களில் நோன்பு நோற்பதையும், இறைநிராகரிப்பாளர்களுக்கும், நயவஞ்சகர்களுக்கும் எதிராக போர் செய்வதையும் மனிதர்கள் செய்ய வேண்டிய கடமைகள் என அல்லாஹுத்தஆலா பணித்துக் கொண்டிருக்கின்றான். எனவே அவன் எவைகளையெல்லாம் கடமையாக்கி இவைகளை இவ் வாறுதான் செய்ய வேண்டும் என வரையறுத்திருக்கின்றானோ அவைகளுக்கு இம்மனித சமுதாயம் கட்டுப்பட்டு நடப்பதுடன், அவன் கூறியதன் பிரகாரம் தமது வாழ்க்கையில் எடுத்து நடக் கவும் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

மேற்கூறப்பட்ட திருவசனங்களை நாம் ஆராய்ந்து பார்ப்போ மேயானால் இன்று இஸ்லாமியர்களில் அதிகமானோர் மறந்திருக் கின்ற ஒரு விஷயம் நமக்குத் தெளிவாகின்றது. அதாவது இன்று சிலர் வணக்கமென்றால் தொழுகையை நிறைவேற்றுவ தும், வருடத்திற்கொரு முறை ஸகாத் கொடுப்பதும், நோன்பு காலங்களில் நோன்பு வைப்பதும், வசதிக்கேற்ப தானதர்மம் செய்

வதும், ஹஜ், உம்றா போன்ற கடமைகளை நிறைவேற்றுவதும், தேவைகளின்போது அல்லாஹ்வைப் பிரார்த்தித்து தமது தேவை யைப் பெற்றுக் கொள்வதும், திக்ரு, தியானங்களில் ஈடுபடுவ தும் இவைகளோடு வேறுசில வணக்கங்களையும் செய்து கொண்டால் தாம் நிறைவேற்ற வேண்டிய கடமை முடிந்து விட்டதெனக் கருதிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்கள் எண்ணிக் கொண்டிருப்பதற்கு மாறாக அவ்வ ணக்கங்களோடு சேர்த்து நல்லொழுக்கங்களையும், நற்குணங் களையும், உலக விதிமுறைகளையும் அன்றாடம் மனிதனது வாழ்வில் காணப்படும் நடைமுறைகளையும் அல்லாஹுத்தஆலா வணக்கமெனக் கூறியிருக்கின்றான் என்ற விஷயத்தை அறியாத வர்களாக இருக்கின்றார்கள்.

அல்லாஹுத்தஆலாவை வணங்குங்கள் என இஸ்லாமிய சமூகத்துக்குக் கூறப்பட்டால் அவர்களில் சிலர் வணக்கம் என் றால் தினமும், ஐவேளை தொழுவதும், ரமழான் மாதத்தில் நோன்பு வைப்பதும், வசதி படைத்தோர் மக்கா நகர் சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றுவதும், அவைகளோடு தொடர்பு டையவைகளான குர்ஆன் ஓதுவதும், அல்லாஹ்வை திக்ரு செய்து தியானிப்பதும், கஷ்ட நேரங்களில் அவனைப் பிரார்த் தித்து தேவைகளை நிறைவு செய்து கொள்வதும், தாம் செய்த தவறுகளுக்காக பாவமன்னிப்புக் கேட்டு பாவமோட்சத்தைப் பெற் றுக் கொள்வதும்தான் வணக்கம் என நினைத்துக் கொண்டி ருக்கின்றார்கள். மிகவும் ஆச்சரியத்துக்குரிய விஷயம் யாதெனில் மார்க்கப்பற்றுள்ள சிலரும் மேற்கூறப்பட்ட வணக்கங்களை செய்துவிட்டால் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமை களை செய்து விட்டதாகக் கருதிக் கொண்டிருப்பதாகும்.

ஆனால் உண்மை நிலை அவ்வாறன்று மேற்கூறப்பட்ட வணக்க வழிபாடுகள் இஸ்லாத்தைக் கட்டியெழுப்புவதற்குரிய மார்க்கத்தின் முக்கிய அடிப்படைகளும், ஒரு சில பகுதிகளுமே தவிர அவைதான் அல்லாஹுத்தஆலா தனதடியார்களிடமிருந்து எதிர்பார்க்கும் முழுமையான வணக்கமும், வழிபாடுகளுமாக

ஆகிவிட மாட்டாது. மாற்றமாக இஸ்லாம் போதித்துக் கொண் டிருக்கும் வணக்க வழிபாடுகள் மிகவும் விசாலமான ஒன்றா கவே இருந்து கொண்டிருக்கின்றது. அந்தடிப்படையில் மனி தனோடு சம்பந்தப்பட்டவைகள், அவனது வாழ்க்கையோடு சம் பந்தப்பட்டவைகளென அனைத்தையும் உள்ளடக்கியிருக்கின்றது. மனிதன் தான் வாழும் வாழ்க்கையில் அவைகளையும் கருத்திற் கொண்டு நடைமுறைப்படுத்துமாறே அவனைப் படைத்த இறை வன் பணித்துக் கொண்டிருக்கின்றான். அவ்வுயரிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் இம்மனித சமுதாயத்தை படைத்த தாகவும் தனது இறுதி வேதத்தில் பல இடங்களில் தெளிவு படுத்திக் கொண்டிருக்கின்றான். அவ்வாறு செயல்பட்டு வருவது தான் மனிதனது உலகக் குறிக்கோளாக இருக்க வேண்டும் என வும் கட்டளையிட்டிருக்கின்றான். எனவே அவனது அடியார்க ளாகிய நாம் அவனது கட்டளைகளுக்கு முற்று முழுதாக வழிப் பட்டு நடப்பது கட்டாயக் கடமையாகும்.

**இறைகட்டளைகளுக்கு வழிப்படுவது வணக்கமாகும்.**

அல்லாஹுத்தஆலாவை வணங்குவதெப்படி எனத்தெரியாது, வணக்கம் என்பதின் சரியான பொருள் அறியாது இன்று சிலர் தட்டுத் தடுமாறிக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். குறிப்பாக நாம் வணக்கத்தை மேற்கொள்வதற்கு முன்னால் வணக்கம் என் றால் என்ன? என்பதின் வரைவிலக்கணத்தை அறிந்திருப்பது அவசியமாகின்றது. ஆக வணக்கமென்பது அல்லாஹுத்தஆலா விரும்பக்கூடிய, அவன் பொருந்திக் கொள்ளக்கூடிய கொள்கை சம்பந்தப்பட்டவைகள், சொல், செயல், சம்பந்தப்பட்டவைகள், வாழ்க்கை, நடைமுறை சம்பந்தப்பட்டவைகள் அனைத்தையும் கடைபிடித்து அவனது வழிகாட்டலுக்கும், மார்க்க சட்டதிட்ட அடிப்படைகளுக்கும் ஏற்ப நடந்து வருவதேயாகும். அதே போன்று அல்லாஹுத்தஆலா செய்ய வேண்டாம் எனத் தடுத்தி ருக்கின்ற விலக்கல்களையும், ஹலால், ஹராம்களையும் கவ னித்து நடந்து கீழ்வரும் திருவசனம் கூறும் கருத்துக்கேற்ப நமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹுத்

தஆலா கூறுகின்றான். இறைவா! (உன் கட்டளைக்கு) நாங்கள் கீழ்படிந்தோம். எங்கள் இரட்சகனே! நாங்கள் உனது மன்னிப்பைக் கோருகின்றோம். உன்பக்கமே (எங்களுடைய) மீட்சி உள்ளது(2.285).

இஸ்லாத்தை சரியான முறையில் பின்பற்றிவரும் ஒரு உண்மையான இறைவிசுவாசி எப்போதும் சாதாரண முஸ்லிம்களிலிருந்து மாறுபட்டவனாகவே காணப்படுவான். ஏனெனில் அவன் அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நம்பி, இஸ்லாம் கூறும் ஏனைய சட்டதிட்டங்களை உண்மையான முறையில் கடைபிடித்து நடக்கின்ற ஒருவனாக இருப்பானே தவிர ஒருபோதும் தனது மனோஇச்சைக்கு கட்டுப்பட்டு, அல்லாஹ்வால் படைக்கப்பட்ட சாதாரண படைப்புக்களை தனக்குரிய கடவுள்களாக எடுத்துக்கொள்ள மாட்டான். அதேபோன்று சிலர் மார்க்கம் என்ற பெயரில் மார்க்கத்தில் இல்லாதவைகளையெல்லாம் செய்வதைப் போல அவனும் செய்துவர மாட்டான்.

மேலும் ஏனையோர் தமது மனோஇச்சைக்குக் கட்டுப்பட்டு தமது வாழ்வை அழித்துக் கொள்வது போன்று அவனும் தனது மனோஇச்சைக்குக் கட்டுப்பட்டு தனது வாழ்வை அழித்துக் கொள்ள மாட்டான். மாறாக அவன் அல்லாஹ்வோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரமே நடந்து வருவான். அதுமட்டுமின்றி அவனது கட்டளைகளுக்கு முக்கியத்துவமளித்தும், அவன் காட்டிய வழிகாட்டலின் பிரகாரம் நடந்தும் தனது வாழ்க்கையை நகர்திக்கொண்டிருப்பான். இத்தன்மைகள் சாதாரண மனிதர்களிடம் இல்லாமல் அவனிடம் மாத்திரம் காணப்படுவதற்குரிய முக்கிய காரணம் அவன் கொண்டிருக்கும் இறை நம்பிக்கைதான் என்றால் அது மிகையாகாது.

மனிதன் இறைவனோடு செய்து கொண்ட ஈமானிய ஒப்பந்தம், இம்மனிதன் அல்லாஹ்வின் கட்டளைகளையும், சட்ட திட்டங்களையும் ஏற்று இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது வழிகாட்டலின் பிரகாரமும், இறுதி வேதம் அல்குர்ஆனின் போதனைகளுக்கேற்பவும் வாழ்ந்து வருவதை எதிர்பார்க்கின்றது.

இம்மனிதனைப் படைத்த அல்லாஹுத்தஆலா ஒன்றை ஏவியிருக்கின்றேன், தடுத்திருக்கின்றேன் எனக்கூற இவன் அதனை ஏற்றுக்கொண்டேன், கட்டுப்பட்டு நடக்கின்றேன் எனக் கூறி கட்டுப்பட்டு நடப்பதும் அவ்வொப்பந்தம் எதிர்பார்க்கும் ஒன்றாகும்.

மனிதன் தனது மனோஇச்சைக்கு கட்டுப்பட்டு அதுகூறும் ஆசாபாசங்களை எடுத்து நடக்காமல் தன்னைப் படைத்தவன் கூறியிருக்கும் சட்டதிட்டங்களுக்கும், கட்டளைகளுக்கும் அடி பணிந்து நடப்பதும் அவ்வொப்பந்தம் எதிர்பார்க்கும் ஒன்றாகும். அல்லாஹ்வும், அடியானும் செய்து கொண்ட மேற்கூறப்பட்ட மூன்று வகை ஒப்பந்தங்களைப் பற்றியும் பின்வரும் திருக்குர் ஆன் வசனங்கள் நமக்கு சிறந்த முறையில் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. அல்லாஹுத்தஆலா தனதருள்மறையில் அவைகளைப்பற்றிக் கூறுகையில் பின்வருமாறு கூறிக்கொண்டி ருக்கின்றான். அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் யாதொரு காரியத்தை முடிவெடுத்து விட்டால் அவர்களுடைய அக்காரி யத்தில் சுயமாக வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு விசுவாசியான எந்த ஆணுக்கும், எந்தப் பெண்ணுக்கும் உரிமையில்லை. (அதில்) அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எவர் மாறு செய்கின்றாரோ அவர் பகிரங்கமான வழிகேடாக திட்டமாக வழிகெட்டு விட்டார்(33.36).

மற்றுமோர் இடத்தில் இவ்வாறு கூறுகின்றான். விசுவாசிகளின் கூற்றாக இருப்பதெல்லாம், அவர்களுக்கிடையே (அல்லாஹ்வு டைய தூதராகிய) அவர் தீர்ப்புக் கூறுவதற்காக அல்லாஹ்விட மும், அவனுடைய தூதரிடமும் (வருமாறு) அவர்கள் அழைக் கப்பட்டால் நாங்கள் செவியுற்றோம். இன்னும் கீழ்ப்படிந்தோம் என்று அவர்கள் கூறுவதுதான். இன்னும் அவர்கள்தாம் வெற்றி யாளர்கள்(24.51).

மேற்கூறப்பட்ட திருவசனங்களின் பக்கம் நமது கவனத்தைச் சற்று திருப்பிப் பார்க்கும்போது, ஒரு மனிதன் நான் அல்லாஹ் வைத் தொழுகின்றேன், அவன் கடமையாக்கிய ஸகாத்தைக்

கொடுக்கின்றேன், வருடத்துக்கொருமுறை நோன்பும் வைக்கின்றேன், முடிந்த பட்சத்தில் மக்கா சென்று ஹஜ் கடமையையும் நிறைவேற்றுகின்றேன் எனக்கூறி அவைகளை சிறந்த முறையில் செய்து வருகின்றான். அவ்வாறு செய்யும் அதேநேரம் தனக்கு எல்லா வகையிலும் சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கின்றது. அச்சுதந்திரங்களின் அடிப்படையில் எனக்கு பன்றியிறைச்சி உண்ணலாம், மது அருந்தலாம், வட்டியின் மூலம் கிடைக்கும் வருமானத்தைச் சாப்பிடலாம், மார்க்கத்தில் தனக்கு அவசியமில்லை என நான் எவைகளையெல்லாம் கருதுகின்றேனோ அவைகளைச் செய்யாமல் விட்டுவிடலாம், அல்லாஹ் இறக்கிய இறுதி வேதமான அல்குர்ஆன் அல்லாதவைகளைக் கொண்டு என்னால் நினைத்தவாறு மார்க்க சட்டதிட்டங்களில் தீர்ப்பு வழங்கலாம் எனக்கூறி அதன்பிரகாரம் செயற்படுவானேயானால் அவன் அல்லாஹுத்தஆலாவையும், அவனது மார்க்கத்தையும் உண்மையான முறையில் ஏற்று அவன் கூறும் சட்டதிட்டங்களை நேசித்து, வணங்கி வழிப்பட்டவனாக ஒருபோதும் கருதப்பட மாட்டான்.

அதேபோன்று இஸ்லாம் கூறியிருக்கும் சில மார்க்க சட்டதிட்டங்களைப் பின்பற்றிக் கொண்டிருக்கும் ஆண்கள், அதே மார்க்கத்தின் புறத்தால் ஹராமாக்கப்பட்ட பட்டாடை, தங்கம் போன்றவைகளை அணிந்து கொண்டும், நடையுடை பாவனைகளில் பெண்களைப் போன்று வேஷமிட்டுக் கொண்டிருந்தாலும், அதேபோன்று பெண்கள் தங்களுடைய அங்கங்களில் மறைக்கப்பட வேண்டிய பகுதிகளை முகமூடி கொண்டு உரிய முறையில் மறைக்காமல் வெளிக்காட்டிக் கொண்டுமிருந்தாலும் அவர்களில் எவரையும் அல்லாஹ்வை வணங்கி வழிப்படுபவர்கள் எனக்கூற முடியாது.

அதேபோன்று பள்ளியின் நான்கு சுவர்களுக்குள்ளும் இருந்து கொண்டு செய்து வருபவைதான் வணக்கம். பள்ளியை விட்டு வெளியேறி விட்டால் தான் நினைத்தவாறு தனது மனம் விம்புபவைகளையெல்லாம் ஹலால், ஹராம் எனப்பாராது செய்து வரலாம். அல்லது பிறமனிதர்கள் வாழுவது போன்று எப்படியும்

வாழலாம் எனக்கருதிக் கொண்டிருப்பவனும் உண்மையான வணக்கவாளியாக ஆக மாட்டான்.

எனவே உண்மையான வணக்கவாளியாக ஒருவன் ஆக வேண்டுமெனில் இஸ்லாம் கூறும் அனைத்து வணக்க வழிபாடுகளையும், அவை மார்க்க சட்ட, திட்டங்களோடு சம்பந்தப்பட்டவைகளாக இருந்தாலும் சரிதான், அல்லது தனது அன்றாட வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவைகளாக இருந்தாலும் சரிதான் அவைகளனைத்தையும் அவசியம் கடைபிடித்து நடக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான வணக்கவாளி என்ற வட்டத்துக்குள் உள்ளவனாக கருதப்படுகின்றான்.

**இஸ்லாத்துக்கு முறனானவைகளைப் பின்பற்றுபவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பித்தவனாவான்.**

இஸ்லாம் நமக்குப் பல கடமைகளை விதித்திருக்கின்றது. அதேநேரம் நாம் அன்றாடம் செய்துவரும் காரியங்களில் சிலதை ஹலாலென்றும், சிலதை ஹராமென்றும் போதித்துக் கொண்டிருக்கின்றது. அச்சட்ட, திட்டங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் நாம் கட்டாயம் கட்டுப்பட்டு நடக்க வேண்டியிருக்கின்றோம் என்ற ஒருமுக்கியமான விஷயத்தை இன்று சிலர் மறந்திருப்பது மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும்.

ஒருவன் இஸ்லாம் கூறும் மார்க்க சட்டதிட்டங்களைப் பேணி, அல்லாஹ்வைத் தொழுது, அவன் கடமையாக்கிய நோன்பை நோற்று, ஸகாத், ஹஜ், உம்ரா போன்ற கடமைகளை நிறைவேற்றி வருகின்றான். ஆனால் அவை தவிர்ந்த உலக சம்பந்தப்பட்டவைகள், குடும்பம் சம்பந்தப்பட்டவைகள், சமுதாயம் சம்பந்தப்பட்டவைகள், நாடு சம்பந்தப்பட்டவைகள் போன்றவைகளில் அல்லாஹ்வினது சட்டதிட்டங்களைக் கடைபிடிக்காமல் தனது அதிகாரத்தைப் பிரயோகித்து தான் நினைத்தவாறு, அல்லது பிறமனிதர்களது சட்டங்களுக்குறப்பட்டு நடந்து கொள்ளலாம் என எண்ணி அதன்பிரகாரம் செயல்பட்டு வருகின்றான். அவ்வாறு செயல்படுபவன் அல்லாஹுத்தஆலாவை விட்டுவிட்டு அவனால் படைக்கப்பட்டவைகளை வணங்கியவனாகவும், அவனுக்

குச் செய்ய வேண்டியவைகளை உரிய முறையில் நிறைவேற்றா மல் அவனுக்கு இணை கற்பித்தவனாகவும் ஆகிவிடுகின்றான்.

ஏனெனில் நாம் காணும் இந்த உலகமும், அதிலே படைக் கப்பட்டிருக்கின்ற படைப்பினங்களும் வல்லநாயன் அல்லாஹுத்த ஆலாவுக்குச் சொந்தமானவைகளாகும். அவன்தான் அவைக ளைப் படைத்து பரிபாலித்துக் கொண்டிருக்கின்றான். அவன் தான் அப்படைப்பினங்களது கடவுளாகவும், அரசனாகவும் இருந்து கொண்டிருக்கின்றான். அவன்தான் அரசன் என்ற அடிப்படையிலும், கடவுள் என்ற அடிப்படையிலும் அப்படைப்பி னங்களில் உயர்ந்து காணப்படும் மனித இனம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யுமாறு ஏவிக்கொண்டிருக்கின்றான். அதே போன்று அவர்களுக்கு ஹலால், ஹராம்களையும் தெளிவுபடுத் திக் கொண்ருக்கின்றான். இவ்வாறிருக்கையில் அவனால் படைக் கப்பட்ட இம்மனித சமுதாயம் அவனது கட்டளைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பதுதான் அவர்களது தலையாய கடமையாகும்.

அல்லாஹ்வின் படைப்பாக இருக்கின்ற இந்த சாதாரண மனி தன் அவனது அனுமதியின்றி தன்னாலும் மார்க்கத்தில் இல்லாத ஒன்றை மார்க்கமாக்கவோ, அல்லது தடுக்கவோ, அல்லது ஹலால் எனக் கூறவோ, அல்லது ஹராம் எனக்கூறவோ முடியும் எனக்கருதினால் அவன் அல்லாஹ்வின் புறத்தால் அவனுக்கிடப் பட்ட வரம்புகளை மீறியவனாகவும், இஸ்லாத்திலிருந்து வெளி யேறியவனாகவும் கருதப்படுகின்றான். அதுமட்டுமின்றி அவனுக் குத் தெரிந்தோ, தெரியாமலோ தன்னை இறைவனது அந்தஸ் துக்கு உயர்த்திய குற்றத்துக்கும் ஆளாகின்றான்.

மேற்கூறப்பட்ட அல்லாஹுத்தஆலாவுக்கு மாத்திரமுரிய உரி மைகள் தனக்குமிருக்கின்றன எனக்கூறிவரும் ஒருவன் அவன் விரும்பியவாறும், அவனது நடைமுறைக்கேற்பவும், கொள்கைக ளுக்கேற்பவும் சட்டதிட்டங்களை இயற்றி அவைகளுக்குக் கட் டுப்பட்டு நடந்தால் அவன் அல்லாஹ்வுடன் இணைத்து தன் னையும் கடவுளாக கணித்து விடுகின்றான். அதன்மூலம் அவன்

அறிந்தோ, அறியாமலோ அல்லாஹ்வுக்கு இணைகற்பித்தவனாக ஆகி விடுகின்றான்.

முன்னைய காலத்தில் வாழ்ந்து வந்த பாதிரிமார்களும், சந்நியாசிகளும் தங்களது மனோஇச்சைக்கேற்ப மார்க்கம் கூறாதவைகளையெல்லாம் ஹலாலெனவும், ஹராமெனவும் கூறி வந்தார்கள். அவ்வாறு அவர்கள் கூறியதை ஆராய்ந்து பாராமலும் அவைகளது பின் விளைவுகளை சிந்தியாமலும் யூத, கிரிஸ்தவர்கள் தங்களுக்குரிய சட்டங்களாக ஏற்று கண்மூடித்தனமாகப் பின்பற்றி வந்தார்கள். அவ்வாறு நடந்து கொண்டார்கள் என்ற ஒரே காரணத்தின் அடிப்படையில்தான் அவர்கள் அல்லாஹுத்தஆலாவை விட்டுவிட்டு அப்பாதிரியார்களையும், சந்நியாசிகளையும் வணங்கப்படும் தெய்வங்களாக எடுத்துக் கொண்டார்கள் என்றும், அல்லாஹ்வுக்கு இணைகற்பித்து விட்டார்கள் என்றும் அல்குர்ஆன் இன்று வரையும் தெளிவுபடுத்திக் கொண்டிருக் கின்றது. அவ்வசனம் கூறுவதை நமது இன்றைய சகோதரர்க ளும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காக அதனை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அல்லாஹுத்தஆலா பின்வருமாறு கூறுகின்றான். (இவ்வாறே) அவர்கள் அல்லாஹ்வை யன்றித் தங்கள் பாதிரிகளையும், தங்கள் சந்நியாசிகளையும், மர்யமுடைய குமாரர் மஸீஹையும் தங்கள் தெய்வங்களாக எடுத்துக் கொண்டனர். இன்னும் ஒரே இரட்சகனையே வணங்க வேண்டுமென்றல்லாது(வேறு எதனையும்)அவர்கள் கட்டளையிடப்படவில்லை. அவனையன்றி வணக்கத்திற்குரியவன் (வேறெவரும்) இல்லை. அவர்கள் இணை வைப்பவற்றை விட்டும் அவன் மிகவும் பரிசுத்தமானவன் (9.31).

மேற்கூறப்பட்ட திருவசனம் ஏன் இறங்கியது? என்ற விளக்கத்தை மனித சமுதாயம் விளங்கி செயல்பட வேண்டும் என்பதற்காக குர்ஆனின் விரிவுரையாளராக வந்த நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் விளக்கிக் கூறுகையில் பின்வரும் சம்பவத்தைக் கூறுகின்றார்கள். அதிய்யுப்னு ஹாதிம் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னால் கிரிஸ்தவராக

இருந்து வந்தார்கள். அவர்கள் கிரிஸ்தவராக இருக்கும் போது தான் நபி (ஸல்) அவர்கள் ஏகத்துவப் பிரச்சாரத்தை மேற் கொண்டிருந்தார்கள். ஏகத்துவக் கொள்கை என்ற அடிப்படை யில் ஒரு பிரச்சாரம் பரவி வருவதைக் கேள்வியுற்ற அதிய்யுப்னு ஹாதிம் (ரலி) அவர்கள் தன்னையும், தான் பின்பற்றி வரும் கிரிஸ்தவக் கொள்கையையும் பாதுகாக்கும் பொருட்டு சிரியா நாட்டுக்கு ஓடிவிட்டார்கள். அவர் சிரியா நாட்டிலிருக்கும்போதே அவருக்குத் தெரியாமல் அவரது சகோதரியும், அவரது கூட்டத் திலுள்ள வேறு சிலரும் இரகசியமாக இஸ்லாத்தை தழுவிக் கொண்டார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அவரது சகோத ரிக்கு நபி (ஸல்) அவர்கள் சில நன்கொடைப் பொருட்களைத் தருவதாகக் கூறியிருந்தார்கள். அவர்கள் கூறியதன் பிரகாரம் சில பொருட்களையும் கொடுத்தார்கள். நபியவர்களது தாராள மன தைக் கண்ட அச்சகோதரி தனது சகோதரனிடம் சென்று நபிய வர்களது நற்குணங்களைக்கூறி இஸ்லாத்தின்பால் ஆர்வமூட்டி னார்கள். தனது சகோதரியின் ஆர்வத்தையும், நபியவர்களது நற்குணங்களையும் செவிமடுத்த அதிய்யுப்னுல் ஹாதிம் (ரலி) அவர்கள் சிரியாவிலிருந்து திரும்புகையில் நேராக நபியவர்க ளைக்காண மதீனா நோக்கிச் சென்றார்கள்.(அதிய்யுப்னுல் ஹாதிம் (ரலி) அவர்கள்தான் அவர்களது கூட்டத்துக்கு தலைவராக இருந்தார்கள் என்பதும், அவரது தந்தை ஹாதிம் அத்தாயி என் பவர் கொடை கொடுப்பதில் பிரசித்தி பெற்றிருந்தார்கள் என்பதும் வேறுகதையாகும்) அதிய்யுப்னு ஹாதிம் (ரலி) அவர்கள் மதீனா வருவதைக் கேள்விப்பட்ட சிலர் அவரது வருகையைப்பற்றி பேசிக் கொண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் கீழ்யுள்ள திரு வசனத்தை ஓதிக் கொண்டிருக்கும்போதே அதிய்யுப்னுல் ஹாதிம் (ரலி) அவர்களும் வெள்ளியிலான சிலுவை அடையாளமுள்ள மாலையை அணிந்தவராக நபி (ஸல்) அவர்களிடம் வந்து சேர் கின்றார்கள். அவர்கள் வரும்போது நபியவர்கள் ஓதிக் கொண் டிருந்த திருவசனம் இதுதான். (இவ்வாறே) அவர்கள் அல்லாஹ் வையன்றித் தங்கள் பாதிரிகளையும், தங்கள் சந்நியாசிகளையும்,

மர்யமுடைய குமாரர் மஸீஹையும் தங்கள் தெய்வங்களாக எடுத்துக் கொண்டனர். இன்னும் ஒரே ஒரு இரட்சகனையே வணங்க வேண்டுமென்றல்லாது (வேறு எதனையும்) அவர்கள் கட்டளையிடப்படவில்லை. அவனையன்றி வணக்கத்திற்குரியவன் (வேறெவரும்) இல்லை. அவர்கள் இணை வைப்பவற்றை விட்டும் அவன் மிகவும் பரிசுத்தமானவன் (*9.31*).

நபி (ஸல்) அவர்கள் ஓதிக்கொண்டிருந்ததை செவிமடுத்துக் கொண்டிருந்த அதிய்யுப்னு ஹாதிம் (ரலி) அவர்கள் சற்று நேரத்தின் பின் அத்திருவசனத்தைச் சுட்டிக் காட்டி அவ்வசனம் கூறுவதுபோன்று கிரிஸ்தவர்கள் அவர்களது பாதிரிமார்களையோ, சந்நியாசிகளையோ வணங்குபவர்களாக இல்லையே எனக்கூறினார்கள். அதைக்கேட்ட நபியவர்கள் ஆம் அவர்கள் அவர்களை வணங்கவில்லைதான். என்றாலும் அந்த பாதிரிமார்களும், சந்நியாசிகளும் அல்லாஹுத்தஆலா ஹலால் எனக்கூறியவைகளை ஹராமெனக்கூறினார்கள். அதேபோன்று அவன் ஹராமெனக் கூறியவைகளை அவர்கள் ஹலால் எனக்கூறினார்கள். அவர்கள் கூறுவதின் பிரகாரம் கிரிஸ்தவர்கள் அக்கருத்துக்களைப் பின்பற்றி வந்தார்கள். இவ்வாறு கண்மூடித்தனமாக பின்பற்றுவதும் அவர்களை வணங்குவதற்கு சமமானதுதான் என விளக்கமளித்தார்கள்(அஹ்மத்,திர்மிதி,இப்னுஜரீர்).

மேலும் ஹுதைபத்துப்னுல் யமானி (ரலி) அவர்களும், இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களும் விளக்கமளிக்கையில், கிரிஸ்தவர்களது பாதிரிமார்களும், சந்நியாசிகளும் ஹலால், ஹராம் எனக் கூறுபவைகளை அவர்களது சீடர்கள் கண்மூடித்தனமாக பின்பற்றி வந்தார்கள் என்றே விளக்கமளித்துள்ளார்கள் என இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் தனது குர்ஆன் விளக்கவுரையில் எழுதுகின்றார்கள். ஸதீய்யு (ரலி) அவர்கள் கூறுகையில், அன்று வாழ்ந்த கிரிஸ்தவர்கள் குர்ஆனினது சட்டதிட்டங்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் அவைகளை அவர்களது முதுகுக்குப் பின்னால் தூக்கியெறிந்து விட்டு அவர்களோடிருந்த பாதிரிமார்கள

தும், சந்நியாசிகளதும் பிரச்சாரத்தின் பிரகாரம் செயல்பட்டு வந்தார்கள் எனக்கூறுகின்றார்கள்.

ஆதலால்தான் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது சமுதாயமான இச்சமுதாயம் தெளிவான சிந்தனையோடும், சிறந்த முறையில் புரிந்தும் செயல்பட வேண்டும் என்பதற்காக அல்லாஹுத்தஆலா இவ்வாறு கூறிக்கொண்டிருக்கின்றான். இன்னும் ஒரேயொரு இரட்சகனையே வணங்க வேண்டுமென்றல்லாது (வேறெதனையும்)அவர்கள் கட்டளையிடப்படவில்லை(*9.31*).

அல்லாஹுத்தஆலா ஒன்றை ஹலாலாக்கி விட்டால் அது ஹலாலாகும். அதேபோன்று அவன் ஒன்றை ஹராமாக்கி விட்டால் அது ஹராமாகும். அவன் மார்க்கமாக்கியவை எவையாக இருந்த போதிலும் அவைகளை நாம் எடுத்து நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவனது கட்டளைகள் மனித, ஜின் சமுதாயத்தினரால் நடை முறைப்படுத்தப்பட வேண்டும் என்பது அவனது கட்டளைகளிலுள்ளதாகும் என்பது மேற்கூறப்பட்ட திருவசனத்தின் மூலம் தெரிய வருகின்றது. மற்றுமொரு இடத்தில் வணக்கத்துக்குரிய நாயன் அவன் மாத்திரம்தான் என்பதை பின்வருமாறு கூறுகின்றான். அவனையன்றி வணக்கத்திற்குரியவன் (வேறெவரும்) இல்லை. அவர்கள் இணை வைப்பவற்றை விட்டும் அவன் மிகவும் பரிசுத்தமானவன்(*9.31*).

**சமூக நற்பணிகளும் வணக்கங்களாகும்.**

இஸ்லாம் கூறும் வணக்கங்களை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குற்பட்டதாக அல்லாஹுத்தஆலா அமைத்து விடவில்லை. மாறாக மனிதர்களது சிந்தனைக்கு எட்டாதவைகளையெல்லாம் அவனுக்குச் செய்யப்பட வேண்டிய வணக்கங்களாக ஆக்கி இஸ்லாமிய வணக்க வழிபாடுகளை மிகவும் விசாலமான ஒன்றாக அமைத்து வைத்திருக்கின்றான்.

அதனடிப்படையில் மனிதன் தனது சமுதாயத்துக்கு நன்மை செய்யும் வகையில் ஆற்றி வரும் அனைத்து நற்கிரியைகளும் இறைவனுக்குச் செய்யப்படும் வணக்கங்களாகும். ஆனால்

அவன் அவைகளைச் செய்யும்போது மனிதர்களிடமிருந்து முகஸ்துதியையோ, அல்லது பெருமையையோ, அல்லது வேறு அற்ப உலக ஆதாயங்களையோ எதிர்பார்க்காமல் இருக்க வேண் டும். அவ்வாறு செயல்படுத்தப் படுபவைகளைத்தான் இஸ்லாம் வணக்கங்களிலும் மேலான வணக்கமாக போற்றுகின்றது.

ஒரு மனிதனுக்கு கவலைக்குரிய ஏதோவொரு நிகழ்ச்சி நடந்து அதன்மூலம் அவன் கவலையடைந்திருக்கையில் நாம் அவனது கவலையில் பங்கு கொள்கையிலும், துன்பத்தோடிருப் பவனின் துன்பத்தில் கலந்து கொள்கையிலும், உண்டு பசியாற உணவின்றிக் கிடப்பவனுக்கு தன்னால் முடிந்த உணவைக் கொடுத்துதவுகையிலும், அநியாயம் இழைக்கப்பட்டவனது அநி யாயத்துக்கெதிராக குரல் கொடுக்கையிலும், கடனாளியின் கடனை அடைப்பதற்கு நம் பணத்தைக் கொடுத்து உதவியா யிருக்கையிலும், குடும்பஸ்தனாயிருக்கின்ற ஒரு ஏழைக்கு தன் னால் முடியுமானவைகளைச் செய்து உதவியாயிருக்கையிலும், தான் செல்லவிருக்கும் பாதையைத் தெரியாதவனுக்கு அப்பா தையை அறிவித்துக் கொடுக்கையிலும், அல்லது படிப்பறிவில்லா தவர்களுக்கு உலக அறிவு, மற்றும் மார்க்க அறிவைக் கற்றுக் கொடுக்கையிலும், நீண்ட தூரம் பிரயாணம் செய்து கொண்டி ருக்கும் ஒரு வழிப்போக்கன் சிறிது நேரம் ஓய்வு பெற்றுச் செல்ல இடமளிக்குமாறு கேட்டால் அவனுக்கு இடமளிக்கையி லும், தனது சகோதரனுக்கு ஏற்படவிருக்கும் தீங்குகளை அறிந்து அவைகள் அவனுக்கு ஏற்படாதவாறு தடுத்து நிறுத்து கையிலும், நாம் நடந்து செல்லும் பாதையில் தனக்கோ, பிற ருக்கோ ஊறுவிளைவிக்கக் கூடிய பொருட்கள் இருப்பதைக் கண்டால் அவைகளை அப்பாதையை விட்டு தூரமாக்குகையி லும், பறவை, மிருகங்கள் போன்ற உயிரினங்களோடு அன்பாய் நடந்து கொள்கையிலும் நமது எண்ணம் அல்லாஹ்வுக்கென்ற தூய எண்ணத்தோடு இருக்குமேயானால், அவைகள் நாம் அல் லாஹ்வுக்குச் செய்யும் வணக்கங்களாகவே கருதப்படுகின்றன. அதனால்தான் இவ்வாறான நற்கிரியைகளை அல்லாஹ்வுக்குச்

செய்யப்படும் வணக்கமாகவும், அவ்வாறு செய்வதை ஈமானின் ஒரு பகுதியாகவும், அல்லாஹ்விடத்தில் அதிக நன்மைகளைப் பெற்றுத் தரக்கூடிய ஒன்றாகவும் இஸ்லாம் ஆக்கியிருக்கின்றது.

நாம் அன்றாடம் நிறைவேற்றிவரும் ஐவேளைத் தொழுகையும், ரமழான் மாதத்தோடு சேர்ந்த இதர சுன்னத்தான நோன்புகளும், வருடத்தில் ஒருமுறை நிறைவேற்றி வரும் ஸகாத்தும், அல்லாஹ்வை திக்ரு செய்வதும், தேவையின் போது அல்லாஹ்வை பிரார்த்திப்பதுமல்ல நமக்குக் கடமையாக்கப்பட்ட வணக்கங்கள். மாறாக நமது வாழ்வில் அன்றாடம் நடக்கக்கூடிய எத்தனையோ நிகழ்வுகள், அன்றாடத் தேவைகள் போன்றவற்றையும் நாம் செய்யும்போது அவைகளை அல்லாஹ்வுக்கென்ற தூய எண்ணத்தோடு செய்கையில் அவைகளும் வணக்கங்களாகவே கருதப்படுகின்றன. அவைகளுக்கு அல்லாஹுத்தஆலா எப்படிப்பட்ட நன்மைகளைத் தரக்காத்திருக்கின்றானோ அவைகளைத் தந்து, நமது நன்மை தட்டின் எடையை அதிகரிக்கச் செய்து விடுகின்றான். நாம் செய்யும் அக்கிரியைகள் நமது பார்வையில் அற்பமானவையாக காணப்பட்ட போதிலும் அவை அல்லாஹுத்தஆலாவிடம் பெரும் நன்மைகளைப் பெற்றுத்தரும் செயல்களாகவே இருந்து கொண்டிருக்கின்றன.

அவ்வாறான நன்மைகளைப் பெற்றுத் தரக்கூடிய ஒரு வணக்கத்தைப்பற்றி அதிலும் மனிதனுடைய வாழ்வில் அன்றாடம் காணப்படக்கூடிய ஒரு விஷயம் என்ற அடிப்படையிலுள்ள இரு சகோதரர்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதைப்பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், ரமழான் மாதத்தில் நோற்கும் நோன்பும், ஐவேளைத் தொழுகையும், ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் தானதர்மமும் பெற்றுத் தரக்கூடிய நன்மைகளை விடவும் சிறந்த நன்மையை பெற்றுத்தரக்கூடிய ஒரு வணக்கத்தை அறிவித்துத் தரட்டுமா? என நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களிடம் வினவினார்கள். அப்போது அந்நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே! ஆம் அறிவித்துத்தாருங்கள் என்றார்கள். அதற்கு நபியவர்கள் தெளிவான ஆதாரம்

இருப்பவனுக்கு சார்பாக தீர்ப்பளித்து அவர்களுக்கிடையில் பிரச்சினையில்லாமல் வாழ வழிவகுப்பதாகும். தெளிவான ஆதாரமிருப்பவனுக்கு எதிராக தீர்ப்பளிப்பது மார்க்கத்தை சிரைத்து விடுகின்றதெனக் கூறினார்கள் (அபூதாவுத்,திர்மிதி,இப்னுஹிப்பான்). மற்றொரு அறிவிப்பில், அது தலையிலுள்ள முடிகளை சிரைத்து விடுகின்றதெனக் கூறமாட்டேன். மார்க்கத்தையே சிரைத்து விடுகின்றதென்றுதான் கூறுவேன் எனக்கூறுகின்றார்கள்(திர்மிதி).

மேலும் உடல் நலம் குன்றியிருக்கும் ஒரு சகோதரனிடம் சென்று அவனது உடல் நிலையைப்பற்றி விசாரிக்கையில் அல்லாஹ் அதற்கு எந்தளவு நன்மையைக் கொடுக்கவிருக்கின்றான் என்பதையும், அவ்வாறு நோய் விசாரிக்கச் செல்பவன் கூறும் சில ஆறுதல் வார்த்தைகளின் மூலம் அந்நோயாளி எந்தளவு மன ஆறுதலடைகின்றான் என்பதையும் பின்வரும் ஹதீஸில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். நபியவர்கள் விளக்கிக் கூறுகையில், உங்களில் உடல் நலம் குன்றியிருக்கும் ஒருசகோதரரை உங்களில் ஒருவர் நலம் விசாரிக்கச் சென்றால், அல்லாஹ்வின் அடியார்களான வானவர்களில் ஒருவர் அவரைப்பார்த்து, உனது உள்ளம் மணமாக இருப்பதோடு, நீ நடந்து செல்லும் ஒவ்வொரு காலடிகளும் மணம் பெற்று விட்டன. மேலும் நீ சுவனத்திலிருக்கும் உயர்தரத்திலுள்ள ஒரு வீட்டையும் பெற்றுக் கொள்கின்றாய் எனக்கூறுகின்றார் எனக்கூறினார்கள்(திர்மிதி,தபறானி).

மற்றுமொரு அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், யார் ஒரு நோயாளியை நலம் விசாரிக்கச் செல்கின்றாரோ அவர் உட்காரும்வரை அல்லாஹ்வின் அருளில் இருந்து கொண்டிருக்கின்றார். அவர் அங்கே உட்கார்ந்து விட்டால் அவனது அருளிலே மூழ்கி விடுகின்றார் எனக்கூறுகின்றார்கள்(அஹ்மத்).

நாளை மறுமையில் அல்லாஹுத்தஆலாவுக்கும், அவனது அடியானுக்குமிடையில் நடக்கவிருக்கும் வித்தியாசமான ஒரு உரையாடலைப்பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறுகையில் பின்வருமாறு கூறுகின்றார்கள். நாளை மறுமையில் அல்லாஹுத்தஆலா மனிதனைப் பார்த்து ஏ மனிதா! எனக்கு உடல் நிலை பாதிக்கப்

பட்டிருந்தது. அப்போது ஏன் நீ என்னை நலம் விசாரிக்க வர வில்லை? எனக்கேட்பான். அதற்கு அம்மனிதன் இறைவா! நீ தான் பாரிய உலகைப் படைத்து, அதனை ஆட்சி செய்து கொண்டிருக்கும் மகா வல்லமை மிக்கவனாயிற்றே இவ்வாறிருக் கையில் எவ்வாறு உனக்கு நலக்குறைவு ஏற்படும்? அவ்வாறு உடல் நலம் குன்றிவிட்டதென்றுதான் வைத்துக் கொண்டாலும் உன்னை நலம் விசாரிக்க என்னால் எவ்வாறு உன்னிடம் வர முடியும்? என வினவுவான். அதற்கு அல்லாஹுத்தஆலா அவ னைப்பார்த்து (ஒரு அடியானின் பெயரைக் குறிப்பிட்டு) உனக் குத் தெரியாதா? நீ உலகில் வாழ்ந்து கொண்டிருக்கையில் இன்ன எனது அடியான் உடல் நலம் குன்றியிருந்தான். அவன் உடல் நலம் குன்றியிருக்கையில் நீ அவனிடம் சென்று அவ னது நிலைமைகளை விசாரிக்க வில்லையே? அன்று நீ அவ னது உடல் நலத்தை விசாரிப்பதற்கு அவனிடம் சென்றிருந்தால் அங்கே என்னைக்கண்டு கொண்டிருப்பாய் எனக் கூறுவான். பின்பு இரண்டாவதாக ஏ மனிதா! நான் உன்னிடம் வந்து எனக்கு உணவளிக்கும்படி வேண்டினேன். ஏன் நீ எனக்கு உணவளிக்கவில்லை? எனக்கேட்பான். அதற்கு அம்மனிதன் இறைவா! நீதான் பாரிய உலகைப் படைத்து, அதனை ஆட்சி செய்து கொண்டிருக்கும் மகாவல்லமை மிக்கவனாயிற்றே இவ் வாறிருக்கையில் எவ்வாறு உனக்குப் பசி ஏற்படும்? அவ்வாறு பசி ஏற்பட்டதென்றுதான் வைத்துக் கொண்டாலும் உனக்கு உணவளிக்க உன்னிடம் எவ்வாறு என்னால் வரமுடியும்? என வினவுவான். அதற்கு அல்லாஹுத்தஆலா அவனைப் பார்த்து (ஒரு அடியானின் பெயரைக் குறிப்பிட்டு) உனக்குத் தெரியாதா? நீ உலகில் வாழ்ந்து கொண்டிருக்கையில் இன்ன எனது அடி யானுக்குப் பசியேற்பட்டது. அப்போது உன்னிடம் வந்து அவ னுக்கு உணவளிக்குமாறு வேண்டினான். அவ்வாறு உண வளிக்கக் கேட்டும் அவனுக்கு நீ உணவளிக்கவில்லை. அன்று நீ அவனுக்கு உணவளித்திருந்தால் அவனிடம் என்னைக் கண்டு கொண்டிருப்பாய் எனக்கூறுவான். பின்பு மூன்றாவதாக ஏ

மனிதா! எனக்கு தாகம் ஏற்பட்டிருக்கையில் உன்னிடம் வந்து எனக்கு அருந்துவதற்கு ஏதாவது தருமாறு கேட்டேன். அப்படிக் கேட்டும் ஏன் நீ எனக்கு அருந்துவற்கு ஒன்றும் தரவில்லை? எனக்கேட்பான். அதற்கு அம்மனிதன் இறைவா! நீதான் பாரிய உலகைப் படைத்து, அதனை ஆட்சி செய்து கொண்டிருக்கும் மகாவல்லமைமிக்கவனாயிற்றே இவ்வாறிருக்கையில் எவ்வாறு தாகம் ஏற்படும்? அவ்வாறு உனக்குத் தாகம் ஏற்பட்டதென்றுதான் வைத்துக் கொண்டாலும் உனது தாகத்தைத் தீர்க்க உன்னிடம் எவ்வாறு என்னால் வரமுடியும்? எனவினவுவான். அதற்கு அல்லாஹுத்தஆலா அவனைப் பார்த்து (ஒரு அடியானின் பெயரைக்குறிப்பிட்டு) உனக்குத் தெரியாதா? நீ உலகில் வாழ்ந்து கொண்டிருக்கையில் இன்ன எனது அடியானுக்கு தாகம் ஏற்பட்டது. அப்போது உன்னிடம் வந்து அவனுக்கு அருந்துவதற்கு ஏதாவது கொடுக்குமாறு வேண்டினான். அவ்வாறு அவன் கேட்டும் அவனுக்கு நீ அருந்துவதற்கு ஒன்றும் கொடுக்கவில்லை. அன்று நீ அவனுக்கு அருந்துவதற்கு ஏதாவது கொடுத்திருந்தால் அவனிடம் என்னைக் கண்டு கொண்டிருப்பாய் எனக் கூறுவான்(முஸ்லிம்).

மற்றுமொரு இடத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், பாதையில் நடந்து சென்று கொண்டிருந்த ஒருவர் தான் செல்லும் பாதையில் இருந்த ஒரு முற்செடியைக் கண்டு அதனை அப்பாதையை விட்டும் தூரமாக்கியதால் அல்லாஹுத்தஆலா அவருக்கு நன்றி செலுத்துமுகமாக அவருடைய பாவங்களை மன்னித்து விட்டான் எனக் கூறுகின்றார்கள்(புகாரி, முஸ்லிம்).

வேறொரு அறிவிப்பில் பாதையில் சென்று கொண்டிருந்த ஒரு மனிதர், அவர் செல்லும் பாதையில் மரக்கிளை ஒன்று இருக்கக் கண்டார். அதனை அவ்வாறே விட்டுவிட்டுச் சென்றால் தனது இஸ்லாமிய சகோதரர்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்பதையும் உணர்ந்தார். உடனே அக்கிளையை அவ்விடத்திலிருந்து அகற்றிவிட்டார். அவ்வாறு செய்த அவரை அல்லா

ஹுத்தஆலா சுவனத்தில் வாழச்செய்தான் எனக்கூறினார்கள் (முஸ்லிம்).

மற்றுமொரு இடத்தில் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூதர் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், எனது சமுதாயத்தினர் உலகில் செய்யவிருக்கும் கிரியைகளில் நல்லவைகளையும், தீய வைகளையும் எனக்குக்காண்பிக்கப்பட்டது. அவ்வாறு காண் பிக்கப்பட்ட நல்லவைகளில் பாதையில் மனிதனுக்கு ஊறுவிளை விக்கும் பொருட்களை அகற்றுவதும் இருந்ததைக் கண்டேன் எனக் கூறுகின்றார்கள்(முஸ்லிம்).

மேற்கூறப்பட்ட ஹதீஸ்களில் கூறப்பட்டிருக்கும் எல்லாவகை யான நற்கிரியைகளையும் இஸ்லாம் புகழ்ந்து, மனிதன் தனது வாழ்க்கையில் அவைகளை எடுத்து நடக்குமாறும் உற்சாகப் படுத்திக் கொண்டிருக்கின்றது. அவ்வாறு அவன் அவைகளை உதாசீனப்படுத்தாது நடைமுறைப்படுத்தி வந்தால் ஒருவேளை அவன் செய்துவந்த தவறுகளால் நரகத்துக்குப்போக வேண்டிய நிலையிருந்தாலும் இவ்வாறான கிரியைகள் அவனை நரகத்திலி ருந்து பாதுகாத்து சுவனத்தின்பால் இட்டுச் செல்லும். அதனால் தான் அவைகளை மனிதன் தனது வாழ்நாளில் எடுத்து நடக்க வேண்டிய கட்டாயக் கடமைகள் என இஸ்லாம் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது. மேற்கூறப்பட்ட நற்கிரியைகளுக்கு தானதர் மம், தொழுகை என பல்வேறுபட்ட பெயர்களை இஸ்லாம் கூறிக் கொண்டிருந்தாலும், அவையனைத்தும் அல்லாஹுத்தஆலா மிக வும் விரும்பக்கூடிய வணக்கங்களாகும்.

அபூதர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஒரு ஹதீஸில் பின் வருமாறு இடம் பெற்றிருக்கின்றது. அபூதர்(ரலி)அவர்கள் கூறு கின்றார்கள். ஒருமுறை நான் நபி (ஸல்) அவர்களிடம் சென்று ஒரு அடியானை நரக நெருப்பிலிருந்து பாதுகாக்கக் கூடிய நற் கிரியை எதுவென? வினவினேன். அதற்கு நபியவர்கள், அல்லா ஹுத்தஆலாவை உண்மையான முறையில் விசுவாசிப்பதாகும் என்றார்கள். அல்லாஹுத்தஆலாவை உண்மையான முறையில் விசுவாசித்த பின்னும் ஒருவன் நற்கிரியைகளில் ஈடுபட வேண்

டுமா? என மீண்டும் வினவினேன். அதற்கவர்கள் அல்லாஹுத்த ஆலா உனக்களித்த அருட்கொடைகளில் சிலதை தானதர்மம் செய்ய வேண்டும் என்றார்கள். அதைக்கேட்ட நான், தனது சகோதரனுக்கு கொடுத்துதவக் கூடியவாறு ஒருவனிடம் வசதி வாய்ப்புகள் இல்லாதிருந்தால் அவன் என்ன செய்ய வேண்டும்? என வினவினேன். அதற்கவர்கள் அவன் நல்லவைகளை பிற ருக்கு ஏவி, அவர்களை தீயவைகளிலிருந்து தடுக்க வேண்டும் என்றார்கள். அதைக்கேட்ட நான் நல்லவைகளை அவனால் பிற ருக்கு கூற முடியாதிருக்கின்றது. அதேபோன்று தீயவைகளை செய்வதை விட்டும் அவர்களை தடுக்கவும் முடியாமலிருக்கின் றது. இவ்வாறான சந்தப்பங்களில் அவன் என்ன செய்ய வேண் டும்? என மீண்டும் வினவினேன். அதற்கவர்கள் தொழில் செய் யத் தெரியாத ஒருவனுக்கு தொழில் செய்யும் முறையைக் கற் றுக் கொடுக்க வேண்டும் என்றார்கள். அதைக்கேட்ட நான் அவ னுக்கே தொழில் செய்யத் தெரியாமலிருக்கின்றது. அப்படியான சந்தர்ப்பத்தில் அவன் என்ன செய்ய வேண்டும்? என மீண்டும் வினவினேன். அதற்கவர்கள் அநியாயம் இழைக்கப்பட்டவனுக்கு உதவி செய்யும் வகையில் அவனுக்கிழைக்கப்பட்ட அநியாயத் தைத் தட்டிக்கேட்க வேண்டும் என்றார்கள். அதைக்கேட்ட நான், அல்லாஹ்வின் தூதரே! அநியாயத்தையும் தட்டிக்கேட்க முடியா வாறு அவன் பலவீனமானவனாக இருக்கின்றான். இப்படியான சந்தர்ப்பத்தில் அவன் என்ன செய்ய வேண்டும்? என வினவி னேன். அதற்கவர்கள் என்னைப் பார்த்து, உனது சகோதர னுக்கு முடியுமான ஒன்று இருப்பதாக நீ எண்ணவே மாட் டாயா? எனக்கூறியவர்களாக மேற்கூறப்பட்டவைகளை செய்ய முடியாத அவன் தனது ஏனைய சகோதரர்களுக்கு துன்பம் இழைக்காமல் இருக்க வேண்டும் என்றார்கள். அதைக்கேட்ட நான் அல்லாஹ்வின் தூதரே! இதனை மாத்திரம் அவன் செய்து வந்தால் சுவனம் செல்வானா? என வினவினேன். அதற்கவர்கள் மேற்கூறப்பட்டவைகளில் எக்கிரியையில் ஒருவன் ஈடுபட்டாலும் அவன் சுவனத்தை சென்றடையும் வரை அவனது கையைப்

பிடித்துக் கொண்டு அவனுடன் சேர்ந்து நானும் செல்வேன் எனக்கூறினார்கள்(பைஹகி).

மேற்கூறப்பட்ட ஹதீஸில் வந்திருக்கும் நற்கிரியைகளைப் போன்ற கிரியைகளை ஒவ்வொரு முஸ்லிமும் தமது வாழ்நாளில் கடைபிடித்து நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றான் என்பதனை நபியவர்கள் சுட்டிக்காட்டி அவைகளைச் செய்யுமாறு தனது சமுதாயத்தினரை ஆர்வமூட்டியும் இருக்கின்றார்கள். மேற்கூறப் பட்ட மிகவும் இலகுவான அவ்வணக்கங்களை மனிதன் குறிப் பிட்ட காலங்களிலோ, அல்லது குறிப்பிட்ட நேரங்களிலோதான் செய்ய வேண்டும் என்றோ, அல்லது செல்வந்தர்களும், சக்திப டைத்தவர்களும், படிப்பறிவுள்ளவர்களும் மாத்திரம்தான் செய்ய வேண்டுமென்றோ ஒரு குறுகிய வட்டத்துள் வரையறுக்க வில்லை. மாறாக உலகில் பிறந்த அனைத்து மனிதர்களும் ஏழை, பணக்காரன், தைரியசாலி, பலவீனமானவன், படித்தவன், பாமரன் என்ற பாகுபாடின்றி அவரவர்களது சக்திக்கேற்ப செய்யக் கூடிய முறையில் இலகுவான ஒன்றாக அவைகளை இஸ்லாம் அமைத்து வைத்திருக்கின்றது.

மேற்கூறப்பட்ட நபிமொழிகள் அவ்வணக்கங்களை செய்து கொள்ளுமாறு மனிதனைப் பணித்ததோடு நின்று விடவில்லை. மாறாக அவ்வணக்கங்கள் யாவை? என்பதனைத் தேடிப்படிப் பதையும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. அத்துடன் அவ்வ ணக்கங்களை மனிதனது உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்புக்க ளின் ஒவ்வொரு மூட்டுக்குச் செய்யும் தர்மமென்றும் தெளிவு படுத்திக் கொண்டிருக்கின்றது. அதனைத் தெளிவுபடுத்தி நபி (ஸல்) அவர்கள் கூறியதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறி விக்கையில், சூரியன் உதிக்கும் ஒவ்வொரு நாளும் மனிதனது உடம்பில் காணப்படுகின்ற ஒவ்வொரு மூட்டுக்கும் செய்யப்பட வேண்டிய தர்மங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இரு மனி தர்களுக்கு மத்தியில் நீதமாக நடந்து கொள்வதும் தர்மமாகும். ஒருவன் தனது வாகனத்தில் ஏறுவதற்கு அவனுக்கு உதவியா யிருப்பதும் தர்மமாகும். அவன் செல்லும் அவ்வாகனத்தில் அவ

னது பொருட்களை ஏற்றி விடவோ, அல்லது இறக்கி விடவோ உதவியாயிருப்பதும் தர்மமாகும். தனது சகோதரனைப் பார்த்துக் கூறும் சிறந்த வார்த்தைகளும் தர்மமாகும். தொழுகைக்கு நடந்து செல்லுகையில் அவன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியும் தர்மமாகும். பாதையில் செல்வோருக்கு துன்பம் விளைவிக்கும் பொருட்களை அப்பாதையிலிருந்து அகற்றி விடுவதும் தர்மமாகும் என அறிவிக்கின்றார்கள்(புகாரி,முஸ்லிம்).

மற்றொரு அறிவிப்பில் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கையில், ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் தன்னுடனிருந்த தோழர்களைப் பார்த்து தினமும் மனிதன் தனது உடல் உறுப்புக்களுக்காக தொழுது கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றான் எனக்கூறினார்கள். அக்கூட்டத்திலிருந்த நபித்தோழர் ஒருவர் நபியவர்கள் அன்றாடம் நிறைவேற்றி வரக்கூடிய தொழுகையைப் பற்றித்தான் கூறுகின்றார்கள் என நினைத்தவராக இவ்வாறு நீங்கள் கூறுவது இதுவரைக்கும் அறிவித்துத் தந்தவைகளில் மிகவும் கஷ்டமான ஒன்றாக இருக்கின்றதெனக் கூறினார். அதைச் செவியுற்ற நபியவர்கள் அவரைப் பார்த்து நீங்கள் உங்கள் சகோதரனுக்கு நல்லதை ஏவி, அவனை தீயது செய்வதை விட்டு தடுப்பதும் தொழுகையாகும். தனது பொருட்களை சுமந்து செல்ல சக்தியற்றவனின் பொருளை நீங்கள் சுமந்து சென்று உதவி ஒத்தாசையாய் இருப்பதும் தொழுகையாகும். மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பாதையிலிருக்கும் அசுத்தங்களை அகற்றி விடுவதும் தொழுகையாகும். ஐவேளைத் தொழுகையை நிறைவேற்ற நீங்கள் பள்ளிக்கு நடந்து செல்லுகையில் நீங்கள் வைக்கின்ற ஒவ்வொரு காலடியும் தொழுகையாகும் எனக்கூறினார்கள்(இப்னுஹுஸைமா).

மற்றொரு அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக புரைதா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், ஒரு மனிதனில் 360 மடிப்புகள் (மூட்டுக்கள்) இருக்கின்றன. அவைகளில் ஒவ்வொரு மடிப்பு(மூட்டு)க்கும் தர்மம் செய்வது அவன் மீது கடமையாகும் எனக்கூறினார்கள். அதனைச் செவியுற்ற நபித்தோழர்கள்

(பணம் சம்பந்தப்பட்ட தர்மத்தைத்தான் நபியவர்கள் கூறுகின்றார் கள் என எண்ணியவர்களாக)அல்லாஹ்வின் தூதரே! அவ்வாறு எங்களில் ஒருவராலும் செய்ய முடியாதே எனக்கூறினார்கள். அதற்கு நபியவர்கள் தனது தோழர்களைப் பார்த்து நீங்கள் பள் ளியிலிருக்கையில் உங்களுக்கு சளி (காரல்) வந்து நீங்கள் அதனை நிலத்தில் உமிழ்ந்துவிட்டு அப்படியே சென்று விடாமல் உமிழ்ந்த அச்சளியை மண் போட்டு மூடிவிடுவது தர்மமாகும். நீங்கள் நடந்து செல்லும் பாதையிலிருக்கும் தீங்கிழைக்கும் பொருட்களை அப்பாதையை விட்டகற்றுவதும் தர்மமாகும் எனக்கூறினார்கள்(அஹ்மத், அபூதாவுத், இப்னுஹுஸைமா, இப்னு ஹிப்பான்).

மேற்கூறியவைகளோடு தனது சகோதரன் சந்தோஷப்படும் வகையில் அவனைப் பார்த்து புன்னகைப்பதும், காது கேட் காமல் செவிடனாக இருக்கும் ஒருவனுக்கு கேட்கும் வகையில் தான் கூறக்கூடியவைகளை சத்தமிட்டுக் கூறுவதும், வழிதவறிய குருடனுக்கு அவன் செல்ல வேண்டிய வழியைக் காண்பித்துக் கொடுப்பதும், தான் செல்ல வேண்டிய பாதை தெரியாது தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு அவன் செல்ல வேண் டிய பாதையைக் காட்டிக் கொடுப்பதும், தேவையுடையோனுக்கு அவனது தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் உதவி ஒத்தாசையாய் இருப்பதும் இதுபோன்ற இன்னும் எத்த னையோ விஷயங்களைக் குறிப்பிட்டு அவைகள் வணக்கங்கள் எனவும், நாம் செய்யும் அன்றாட தானதர்மங்களில் மிகவும் சிறந் ததெனவும் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இவ்வாறு ஒருவன் தனது வாழ்வில் மேற்கூறப்பட்டவை களை எடுத்து நடக்கையில் அவன் ஏனையோர்களை விட சிறப் புமிக்கவனாகவும், அல்லாஹ்வின் அருள் நிறைந்தவனாகவும் காணப்படுகின்றான். அத்துடன் அவன் மாத்திரம் நற்கிரியைகளில் ஈடுபடாது அவைகளை ஏனைய இஸ்லாமிய சகோதரர்களுக்கும் கற்றுக் கொடுத்து அவைகளைச் செய்யுமாறு ஆர்வமூட்டி தனது சமுதாயத்தவர்களுக்கு பிரயோஜனமளிக்கக் கூடியவனாக

மாறிவிடுகின்றான். இவ்வாறிருப்பவன்தான் மற்றொரு வகையில் நற்கிரியைகளின் திறவுகோலாகவும், தீயவைகளைத்தடுத்து நிறுத்தும் தடைக்கல்லாகவும் இருந்து கொண்டிருக்கின்றான்.

நாம் மேற்கொள்ளும் மேற்கூறப்பட்ட நற்கிரியைகளும், அதன் மூலம் கிடைக்கக்கூடிய பிரயோஜனங்களும் மனிதன் என்ற வட்டத்திற்குள் மாத்திரம் சுருங்கி விடாமல், உலகில் படைக்கப் பட்ட மிருகங்கள், பறவைகள் போன்ற அனைத்துப் படைப்பினங்களிலுமாக இருக்க வேண்டும். எனவே அவைகளோடு அன்பாக இருப்பதோடு, தாமும் தீங்கிழைக்காது பிறரிலிருந்தும் தீங்குகள் ஏற்படாதவாறு பாதுகாப்பது நம் கடமையாகும். அவ்வாறு செய்யும்போது அவைகள் நம்மை அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக்கி வைக்கும் வணக்கங்களாகவும், அவனது திருப் பொருத்தத்தை பெற்றுத் தரும் தர்மங்களாகவும் இருக்கின்றன.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுடன் உட்கார்ந்து கொண்டிருக்கையில் பின்வரும் சம்பவத்தைக் கூறினார்கள். ஒருதினம் ஒரு நாய் குடிப்பதற்கு நீர் கிடைக்காமல் தாகத்தின் கொடுமை காரணமாக மண்ணை நக்கியவாறு தனது வாலை ஆட்டிக் கொண்டிருந்தது. அக்காட்சியைக் கண்ணுற்ற ஒரு மனிதர் அதன் பரிதாப நிலையறிந்து அதன் மீது இரக்கம் கொண்டார். அந்நாயை அதேநிலையில் விட்டுச்செல்ல மனமின்றி அதனை அழைத்துக்கொண்டு ஒரு கிணற்றின் பக்கம் சென்றார். அக்கிணற்றில் நீர் இருந்தும் அதனை வெளியிலெடுப்பதற்கு வசதியில்லாததைக் கண்ட அவர் மனம் தளராது அக் கிணற்றுள் இறங்கி தனது பாதணியால் அந்த நாய்க்கு தண்ணீர் இறைத்து அதனது தாகத்தைத் தீர்த்து வைத்தார். இவ்வாறு செய்த அவரது அச்செயலுக்கு நன்றி செலுத்தும் முகமாக அல்லாஹுத்தஆலா அவரது பாவங்களை மன்னித்து விட்டான் எனக்கூறிக் கொண்டிருந்தார்கள். இச்சம்பவத்தைக் கேட்டுக் கொண்டிருந்த நபித்தோழர்கள் ஆச்சரியப்பட்டவர்களாக நபியவர்களைப் பார்த்து அல்லாஹ்வின் தூதரே! மிருகங்களுக்கு உதவுவதிலும் நமக்கு நன்மையுண்டா? என வினவினார்கள். அதற்கு

நபியவர்கள் உயிருள்ள எல்லாப் பிராணிகளுக்கும் தொண்டு செய் வதில் உங்களுக்கு நன்மை இருக்கின்றதெனக் கூறினார்கள் (புகாரி).

மேற்கூறப்பட்ட நபிவாக்கின் பிரகாரம் மனிதர்களோடு இணைத்து உயிருள்ள அனைத்துப் படைப்பினங்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிட்டுக் கொண்டிருக்கையில், வணக்கங்களில் ஈடுபட ஆர்வமுள்ளவர்களும், அதிக நன்மைகளைக் கொள்ளையடித்துக் கொள்ள வேண்டுமென எண்ணுபவர்களும் வணக்கஸ்தலங்களுக்குச் சென்று நிறைவேற்றும் குறிப்பிட்ட வணக்கங்களை மாத்திரம் செய்து தமது வணக்கங்களை சுருக்கிக் கொள்ளாமல், மனிதனுக்கும், அவனைப்போன்ற ஏனைய உயிருள்ள படைப்பினங்களுக்கும் தொண்டுசெய்து வாழ தம்மைப் பழக்கிக் கொள்ள வேண்டும்.

**மனிதனது அன்றாட செயல்களும் வணக்கங்களாகும்.**

குறிப்பாக மனிதன் தனக்கும், தனது குழந்தைகளுக்கும், தனது குடும்பத்துக்கும் தேவையானவைகளை பெற்றுக் கொள் வதற்குரிய முறையில் அன்றாடம் செய்துவரும் அனைத்துக் காரியங்களையும் இஸ்லாம் வணக்கம் எனக்கூறிக் கொண்டிருக் கின்றது. அவன் செய்யக்கூடிய அக்காரியங்கள் பிறருக்கு பிர யோஜனம் அளிக்காமல் தனது குடும்ப வட்டத்துள் பிரயோஜ னப்படக் கூடியதாயிருப்பினும் சரிதான் அவைகளும் அல்லாஹ் வுக்குச் செய்யப்படும் வணக்கமாகவே கணிக்கப்படுகின்றன. ஆகவே தனது விவசாய நிலத்தில் வேலை பார்க்கும் விவசாயி யும், தனது வேலைத்தலத்தில் வேலை செய்யும் தொழிலாளியும், தனது நிர்வாகத்தில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தனும் இதர தொழில்களில் ஈடுபடுவோரும் அவர்களது அச்செயல்களினால் அல்லாஹ்வை வணங்கி வழிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்களது அத்தொழில்கள் கீழ்வரும் நிபந்தனைக ளுக்கு உற்பட்டவாறு அமைய வேண்டும். அவ்வாறு அமைந் தால்தான் அவைகள் ஒரு வகையில் தொழுகையாகவும், மற் றொரு வகையில் அல்லாஹ்வின் பாதையில் செய்யும் ஜிஹாதாக

வும் இருந்து கொண்டிருக்கும். மேற்கூறப்பட்டவாறு ஒருவன் தனக்கும், தனது குடும்பத்துக்கும் தேவையானவைகளை தேடும்போது பின்வரும் நிபந்தனைகளைக் கடைபிடித்து நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றான். அவைகள் பின்வருமாறு.

- தான் செய்யும் தொழில் இஸ்லாத்தினால் அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனவே வட்டியெடுத்தல், நடனமாடுதல், மது விற்றல் போன்ற இஸ்லாம் தடுத்தவைகளில் ஈடுபடுபவர்கள் வணக்கத்தில் ஈடுபடுபவர்களல்லர்.
- தான் செய்துவரும் தொழிலில் ஈடுபடும்போது தன்னையும், தனது குடும்பத்தையும் நல்லமுறையில் வழிநடத்திச் செல்ல வேண்டுமென்றும், சமுதாயத்துக்கு நல்லதைச் செய்து அல்லாஹுத்தஆலா ஏவியதன் பிரகாரம் வாழ வேண்டும் என்றும் நல்லெண்ணம் கொண்டிருக்க வேண்டும்.
- தனது தொழிலை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஓரிடத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், அல்லாஹுத்தஆலா ஒவ்வொரு வேலையையும் சிறந்த முறையில் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தியுள்ளான் எனக்கூறுகின்றார்கள்(முஸ்லிம்). மற்றொரு இடத்தில் கூறுகையில், உங்களில் ஒருவர் ஒரு வேலையைச் செய்தால் அவ்வேலையை சிறம்பட செய்வதை அல்லாஹுத்தஆலா விரும்புகின்றான் எனக் கூறுகின்றார்கள்(பைஹகி).
- அத்தொழிலை அல்லாஹ் எவ்வாறு செய்ய வேண்டும் என கட்டளை பிறப்பித்திருக்கின்றானோ அதன்பிரகாரம் தனது சகோதரர்களுக்கு அநியாயம், துரோகம் போன்றவைகளைச் செய்யாமலும், அடுத்தவர்களின் சொத்து செல்வத்தை அபகரிக்கும் எண்ணமில்லாமலும் செய்து வர வேண்டும்.
- தான் செய்து வரும் தொழில்கள் மறுமைக்காகச் செய்யும் நற்கிரியைகளை செய்வதைவிட்டும் தடுக்காதிருத்தல் வேண்டும். அதனைப்பற்றி அல்லாஹுத்தஆலா கூறும்போது பின்வருமாறு கூறிக்காட்டுகின்றான். விசுவாசங் கொண்டோரே!

உங்களுடைய செல்வங்களும், உங்களுடைய மக்களும் அல்லாஹ்வுடைய நினைவிலிருந்து உங்களைத் (திருப்பி) வீணாக்கி விடவேண்டாம். இன்னும் எவர் அதைச் செய்கிறாரோ அவர்கள்தாம் நஷ்டமடைந்தவர்களாவர்(*63.9*).

மற்றுமொரு இடத்தில் இவ்வாறு கூறுகின்றான். (அவ்வாறு துதி செய்யும்) ஆடவர்கள் அவர்களை வாணிபமோ (கொடுப்பினையின் மூலம்) விற்பனையோ அல்லாஹ்வை நினைவு கூர்வதை விட்டும், தொழுகையை முறையாக நிறைவேற்றுவதை விட்டும், ஸகாத் கொடுப்பதை விட்டும் (பராமுகமாக்கி) வீணாக்கி விடாது(*24.37*).

மேற்கூறப்பட்ட விதிமுறைகளினடிப்படையில் ஒருவன் பேணுதலோடு தனது தொழிலில் ஈடுபட்டு வரும்போது அத்தொழில் அவனது அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குரிய ஒன்றாக காணப்பட்ட போதிலும் அதன்மூலம் அவன் அல்லாஹ்வை வணங்கியவனாகவும் கருதப்படுகின்றான். நாம் செய்யும் தொழில்கள் வணக்கங்கள்தான் என்பதை அறிவிக்கும் பின்வரும் நபிமொழியைப் பார்ப்போம். கஃப் பின் உஜ்ரா (ரலி) அவர்கள் அறிவிக்கையில், நபி (ஸல்)அவர்கள் ஓரிடத்தில் நபித்தோழர்களுடன் உட்கார்ந்து கொண்டிருக்கையில் அவ்வழியே ஒரு மனிதர் சென்று கொண்டிருப்பதை நபித்தோழர்கள் கண்டார்கள். அவரது நடையிலுள்ள சுறுசுறுப்பையும், உடம்பில் காணப்பட்ட திடகாத்திரத்தையும் அவதானித்த நபித்தோழர்கள் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து அல்லாஹ்வின் தூதரே! இவர் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற வார்த்தையை மேலோங்கச் செய்யும் வகையில் மேற்கொள்ளப்படும் போரில்(அல்லாஹ்வின் பாதையில் போரிடுவதுதான் அன்று அவர்களிடம் மிகவும் சிறப்புக்குரிய வணக்கமாக கருதப்பட்டு வந்தது) கலந்து கொண்டால் எவ்வாறிருக்கும்? என வினவினார்கள். அதைக்கேட்ட நபி யவர்கள் தனது தோழர்களைப் பார்த்துக் கூறுகையில், அவர் தனது சிறுகுழந்தைக்கு உணவு தேடிச்சென்றாலும் அவர் அல்லாஹ்வின் பாதையிலேதான் சென்று கொண்டிருக்கின்றார். அவர்

தனது இரு வயோதிபப்பெற்றோருக்கு உணவு தேடிச்சென்றாலும் அவர் அல்லாஹ்வின் பாதையிலேதான் சென்று கொண்டிருக்கின்றார். அவர் தனது பசியைப் போக்கிக் கொள்வதற்காக உணவு தேடிச் சென்றாலும் அவர் அல்லாஹ்வின் பாதையிலே தான் சென்று கொண்டிருக்கின்றார். அவ்வாறில்லாமல் அவருடைய சுறுசுறுப்பையும், உடல் திடகாத்திரத்தையும் பார்ப்பவர்கள் தன் சுறுசுறுப்பையும், உடல் திடகாத்திரத்தையும் பார்த்து புகழ வேண்டும் என்ற நோக்கில் முகஸ்துதியை நாடியும், ஆணவம் கொண்டவராகவும் சென்று கொண்டிருந்தால் அவர் ஷைத்தானுடைய வழியில் சென்று கொண்டிருக்கின்றார் எனக்கூறியதாக அறிவிக்கின்றார்கள்(தபறானி).

நமக்கும், நமது மனைவி, குழந்தைகளுக்கும் தேவையான ஆகாரத்தைத் தேடி பூமியில் அலைந்து திரிவதைப்பற்றி அல்லாஹுத்தஆலா பின்வருமாறு கூறுகின்றான். பின்னர்(ஜூம்ஆத் தொழுகை நிறைவேற்றப்பட்டு விட்டால் (பள்ளியிலிருந்து வெளிப்பட்டுப்) பூமியில் பரவிச்சென்று அல்லாஹ்வுடைய பேருளைத் தேடிக் கொள்ளுங்கள்(62.10).

மற்றுமொரு இடத்தில் பின்வருமாறு கூறுகின்றான். (ஹஜ்ஜுப் பிரயாணத்தின்போது) நீங்கள்(வியாபாரம் செய்து அதன்மூலம்) உங்கள் இரட்சகனிடமிருந்து பேரருளைத் தேடிக்கொள்வது உங்கள்மீது குற்றமல்ல (2.198).

மற்றுமோர் இடத்தில் கூறும்போது, ஒருவன் தனக்குரிய ஆகாரத்தைத்தேடி வெளிக்கிட்டுச் செல்பவனைப்பற்றிக் கூறுகையில் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்வதற்காக வெளிக்கிட்டுச் செல்லும் முஜாஹிதீன்களுடன் இணைத்தே கூறிக் கொண்டிருக்கின்றான். (ஏனெனில்) உங்களில் அல்லாஹ்வின் பேரருளைத் தேடியவர்களாக பூமியில் பிரயாணம் செய்யும் வேறு சிலரும், அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யும் வேறு சிலரும் இருப்பார்கள்(73.20).

இன்று ஏழ்மையின் கோரப்பிடியில் வாழ்ந்து வரும் ஏழை மக்கள் செய்துவரும் ஒரு தொழிலான விவசாயத்தினதும், மரம்

நடுவதினதும் சிறப்பைப்பற்றியும், அவ்வாறானவைகளில் ஈடுபடு பவனுக்கு அல்லாஹுத்தஆலா வழங்கவிருக்கும் நன்மையைப் பற்றியும் நபி(ஸல்)அவர்கள் ஓரிடத்தில் கூறுகையில், ஒரு முஸ் லிம் ஒரு மரத்தை நட்டி, அல்லது ஒரு விதையைப் பயிரிட்டு அதிலிருந்து பறவைகளோ, அல்லது மனிதர்களோ, அல்லது மிருகங்களோ சாப்பிட்டுச் சென்றால் அது அவனுக்கு தர்மமாக ஆகிவிடுகின்றது எனக்கூறினார்கள்(புகாரி,முஸ்லிம்).

வேறொரு அறிவிப்பில் நபியவர்கள் கூறுகையில், உண்மை பேசி விசுவாசமான முறையில் வியாபாரம் செய்யும் ஒரு வியாபாரி நாளை மறுமையில் நபிமார்களுடனும், உண்மையாளர்களுடனும், அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்து மரணித்தவர்களுட னுமே இருந்து கொண்டிப்பான் எனக் கூறுகின்றார்கள்(திர்மிதி).

மேற்கூறப்பட்ட இஸ்லாமிய அறிவுரைகளின் மூலம் இஸ்லா மியர்கள் தொழில்களில் ஈடுபடுவதும் வணக்கங்களாகும் என்பது தெளிவாகின்றது. எனவே இஸ்லாமியர்கள் இவ்வாறான மார்க்க அறிவுரைகளைத் தெரிந்து கொண்டே தன்னிடமுள்ளவைகளை ஏனையோருக்குக் கொடுக்காமல் அவர்களிடம் யாசகம் கேட்பவர் களாக இருக்கக்கூடாது. மேலும் நம்மில் சிலர் தாம் வணக் கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம் எனக்கூறி சமூகத்தை விட்டொதுங்கி இருக்கின்றார்கள். அவ்வாறிருப்பதையும் இஸ் லாம் தடுத்துக் கொண்டிருக்கின்றது. மாறாக மனிதன் வாழ்க் கையின் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு தனது திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்றே போதித்துக் கொண்டிருக்கின் றது. அதன்மூலம் தனது மக்களும், சமுதாயமும் பிரயோஜனம் அடையவேண்டும். அப்போதுதான் அவனது அனைத்து செயற் பாடுகளும் நன்மைகள் கொடுக்கப்படுவதற்குரிய செயல்களாக வும், தொழுகையாகவும் இருந்து கொண்டிருக்கும்.

**மனைவியரோடு உடலுறவு கொள்வதும் வணக்கமாகும்.**

நாம் முன்னைய பகுதிகளில் கூறிய நற்கிரியைகளில் மனிதன் சிறந்த முறையில் ஈடுபட வேண்டுமெனில் அவைகளைச் செய்து கொள்ள அவனுக்கு உறுதுணையாயிருக்கும் சில அத்தியாவசிய

மானவைகளையும் செய்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றான். அதன்பிரகாரம் அவன் தன் வலிமையைப் பலப்படுத்திக் கொள் ளும் வகையில் உண்ணுதல், பருகுதல், மனைவியுடன் உடலு றவு கொள்தல் போன்றவைகள் அவசியமானவைகளாகும். எனவே அவன் அவைகளில் ஈடுபடும்போது இஸ்லாத்தின் அடிப்படையி லும், சிறந்த எண்ணத்தின் அடிப்படையிலுமாக இருக்குமேயா னால் அவைகளும் வணக்கங்களாகவே கருதப்படுகின்றன.

மனிதன் தனது இச்சையைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் தனது மனைவியுடன் உடலுறவு கொள்வதும் வணக்கமாகும். அதற்கும் நன்மைகள் இருக்கின்றன என்பதைப்பற்றி நபியவர்கள் பல இடங்களிலே தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுடன் உட்கார்ந்து கொண் டிருக்கும்போது, அத்தோழர்களைப் பார்த்து நீங்கள் உங்களது மனைவியுடன் உடலுறவு கொள்வதும் நீங்கள் செய்யும் தர்மங் களிலுள்ளதாகும் என்றார்கள். அதனைக்கேட்ட நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே! ஒருவர் தனது இச்சையை தீர்த்துக் கொள்ளும் வகையில் உடலுறவு கொள்வதற்கும் நன்மை யுண்டா? என வினவினார்கள். அதற்கு நபியவர்கள் ஒருவன் இஸ்லாம் தடுத்திருக்கும் வழிகளில் ஈடுபட்டு தனது இச்சை யைத் தீர்த்துக் கொண்டால் அதற்கு தண்டனையிருக்கின்றதா? என வினவினார்கள். அதற்கு நபித்தோழர்கள் ஆம் எனப் பதில ளித்தார்கள். அவ்வாறு தவறான வழியில் சென்று தனது இச் சையை தீர்த்துக் கொள்பவனுக்கு எவ்வாறு தண்டனையிருக் கின்றதோ அதேபோன்று அவனுக்கு ஆகுமாக்கப்பட்ட முறையில் தனது இச்சையைத் தீர்த்துக்கொள்ளும்போது அதற்கும் நன் மையிருக்கின்றது எனக் கூறினார்கள்(முஸ்லிம்,திர்மிதி).

இந்த நபிவாக்கிற்கிணங்க மார்க்க அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கையில், அவ்வாறு ஒருவன் தனது இச்சையை தீர்க் கும்போது தான் மனைவிக்குரிய கடமையை நிறைவேற்றுகின் றேன் என்றும், தனது மர்மஸ்தானத்தை தீயவழிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவே இதில் ஈடுபடுகின்றேன் என்றும் நல்

லெண்ணம் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அல்லாஹுத்தஆலா அதற்கு நன்மை வழங்குகின்றான் எனக்கூறுகின்றார்கள். இவ்வாறு மனிதனது சொந்த விஷயங்களுக்கெல்லாம் அவன் நன்மை வழங்குகின்றான் என்பதின் மூலம் அவன் அடியார்கள்மீது எவ்வளவு அன்பும், கருணையும் கொண்டிருக்கின்றான் என்பதையே தெளிவுபடுத்துகின்றது.

**மனித வாழ்வு சம்பந்தப்பட்டவைகளும் வணக்கமாகும்.**

அல்லாஹுத்தஆலா தன்னை அவனது பிரதிநிதியாகத்தான் இவ்வுலகில் படைத்திருக்கின்றான் என்பதை ஒருவன் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு அறிந்து கொள்ளும் போதுதான் அவன் அல்லாஹ்வின் சட்டதிட்டங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் கட்டுப்பட்டு நடந்து வணக்கத்துக்குரிய நாயன் அவனைத்தவிர வேறு எவருமில்லையென்ற ஏகத்துவக் கொள்கையை நிலை நிறுத்துவதற்குப் பாடுபடுகின்றான். அவ்வாறு நடப்பதுதான் தனது கடமை என்ற உள்ளுணர்வோடு வணங்கி வழிப்பட்டு வரும்போது அவனது சொல், செயல் அனைத்தையும் அல்லாஹ்வுக்குரிய வணக்கங்களாக ஆக்கிக் கொண்டவனாக மாறிவிடுகின்றான். இதைத்தான் பின்வரும் திருவசனமும் நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றது. அல்லாஹுத்தஆலா பின்வருமாறு கூறுகின்றான். மேலும் ஜின்களையும், மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை(52.56).

அல்லாஹுத்தஆலா கூறிக்கொண்டிருக்கும் மேற்கூறப்பட்ட கூற்றை வைத்து இன்றைய மனிதர்கள் செய்து வரும் வணக்கங்களைச் சற்று சிந்தித்துப் பார்ப்போமேயானால், சில நொடிப் பொழுதுகளில் செய்து முடிக்கக்கூடிய குறிப்பிட்ட சில வணக்கங்களைத்தான் அன்றாடம் செய்து வரவேண்டிய வணக்கங்களாக அவர்கள் கருதிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அல்லாஹுத்தஆலாவோ மனிதனது வாழ்க்கை முழுதும் வணக்கமாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றான். அவன் எதிர்

பார்ப்பது போன்று மனிதன் தனது வாழ்க்கை முழுவதையும் வணக்கமாக மாற்றிக் கொள்ளாததால் அம்மனிதன் வணக்கங் களில் ஈடுபடும் அந்நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்கள் அநியா யமாகவும், அல்லாஹ்வின் எதிர்பார்ப்புக்கு முற்றிலும் மாற்றமாக வும் சென்று கொண்டிருக்கின்றன. நிலமை இவ்வாறிருக்கை யில் அல்லாஹுத்தஆலா தனது அடியார்களிடமிருந்து எதிர் பார்க்கும் வணக்க வழிபாடுகளை சரிவர நிறை வேற்றவில்லை என்ற குறையோடுதான் மனிதர்கள் இன்று வாழ்ந்து கொண்டி ருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

இவ்வாறு மனிதர்கள் இஸ்லாத்தின் வணக்கங்களை குறிப் பிட்ட வணக்கங்களால் எடைபோட்டுக் கொண்டிருப்பதைப்பற்றி கஸ்ஸாலி எனும் சூபிப் பெரியார் கூறுகையில், இஸ்லாத்தைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றோம் எனக்கூறிக் கொண்டிருப்போர் விரல் விட்டு எண்ணி முடிக்கக் கூடிய வணக்கங்களை செய்வ தின் மூலம் இஸ்லாத்தை முழுவதுமாக பின்பற்றியவர்களாக ஆகிவிட மாட்டார்கள். மாறாக அவர்கள் மரணிக்கின்ற வரை அவர்களது வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டுமென இஸ் லாம் பணித்திருக்கின்றதோ அதன்பிரகாரம் வாழ்ந்து மரணிப்ப தையே வணக்கம் எனக்கூறிக் கொண்டிருக்கின்றது எனக் கூறுகின்றார்கள்.

அன்றாடம் நாம் காணக்கூடிய உலக நடைமுறைகளை எடுத்து நோக்கினாலும் அந்த உண்மை நமக்குத் தெளிவாகப் புரிந்துவிடும். உதாரணத்துக்கு ஒருவன் சில இயந்திரங்களை உற்பத்தி செய்கின்றான் என வைத்துக் கொள்வோம். அவ்வாறு அவன் உற்பத்தி செய்தவைகளில் எத்தனை இயந்திரங்கள் செய் திருக்கின்றேன் என்பது அவனுக்கு முக்கியமல்ல. அவைகளில் எத்தனை இயந்திரங்கள் தான் எதிர்பார்ப்பது போன்று இயங்கு கின்றன என்பதுதான் அவனுக்கு முக்கியமாகும். அதேபோன்று தான் நாம் காணக்கூடிய விமானங்கள் பறக்கக் கூடியவாறும், பேனைகள் எழுதக் கூடியவாறும், இதுபோன்ற ஏனைய பொருட் கள் பிரயோஜனமளிக்கக் கூடியவாறும் இருக்க வேண்டும். அவ்

வாறிருந்தால்தான் நாம் அவைகளை வாங்கவோ, அல்லது அவைகளை விற்கவோ, அல்லது அவைகளிலிருந்து பிரயோஜன மடையவோ முடியும்.

மேற்கூறப்பட்ட மனிதனுடைய படைப்புக்கள் எவ்வாறிருக்க வேண்டுமென அவன் நினைக்கின்றானோ, அதேபோன்றுதான் மனி தனுடைய உள்ளமும் இருக்க வேண்டுமென இஸ்லாம் எதிர் பார்க்கின்றது. எப்போது அவ்வுள்ளம் அல்லாஹுத்தஆலா என் றொரு கடவுள் இருக்கின்றான், அவன் தனது நடவடிக்கைக ளைக் கண்காணித்துக்கொண்டிருக்கின்றான் என்ற அச்ச உணர்வோடு செயல்பட்டு வருகின்றதோ அப்போது அவ்வுள்ளம் எதிர் கொள்ளக்கூடிய அனைத்துப் பிரச்சினைகளையும் சீர்படுத்தி அவைகளையும் அல்லாஹ்வுக்கென்ற தூய எண்ணத்தோடு செயல்படுத்திக் கொண்டு தனது பயணத்தைத் தொடர்கின்றது. அவ்வாறு ஈடுபடும்போது அவைகளும் அல்லாஹ்வுக்குரிய வணக்கமாக ஆகிவிடுகின்றன. உதாரணத்துக்கு நாணயம் செய் யும் ஓர் இயந்திரத்துள் ஒரு இரும்புத் துண்டைப் போட்டால் எவ்வாறு அது பிரயோஜனமளிக்கும் நாணயமாக வெளியாகின் றதோ, அதேபோன்று மனிதனுடைய விசுவாசத்துடன் இணையும் அவனது உலக விஷயங்களும் பிரயோஜனமளிக்கக்கூடிய வணக் கமாகவே இருந்து கொண்டிருக்கும்.

இதனடிப்படையில்தான் உலக ஆசாபாசங்களிலும், மனோ இச்சைகளிலும் மயங்கிக்கிடப்போரது அறை கூவலை நிராக ரித்து அல்குர்ஆன் பின்வருமாறு கூறிக்கொண்டிருக்கின்றது. (நபியே!) யூதராகவோ, அல்லது கிறிஸ்தவராகவோ ஆகியவரைத் தவிர (வேறெவரும்) சுவர்க்கம் பிரவேசிக்கவே மாட்டார்கள் என அவர்கள் கூறுகிறார்கள். இது அவர்களுடைய வீண் எண்ண மேயாகும். (ஆகவே உங்கள் கூற்றில்) நீங்கள் உண்மையாளர் களாக இருந்தால் உங்களுடைய ஆதாரத்தைக் கொண்டு வாருங்கள் என(நபியே!)நீர் கூறுவீராக. ஆம் எவர்தன் முகத்தை அவர் நன்மை செய்து கொண்டிருக்கின்ற நிலையில் அல்லாஹ் வுக்காக ஒப்படைக்கிறாரோ அவருடைய நற்கூலி அவருடைய

இரட்சகனிடம் அவருக்குண்டு. (இத்தகையோர்) அவர்கள் மீது எத்தகைய பயமுமில்லை. அவர்கள் கவலையும் அடைய மாட்டார்கள்(2.111−112).

எனவே வாழ்க்கை வட்டத்தில் எந்த நற்கிரியைகளையும் குறிப்பிட்ட எண்ணிக்கைக்குள்ளோ, குறிப்பிட்ட வரையறைக்குள்ளோ அடக்கிவிடக் கூடாது. மாறாக நமது அனைத்துக் காரியங்களிலும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, அவனது எதிர் பார்ப்புக்கேற்றவாறு அவைகளை நடைமுறைப்படுத்தி, ஏனையோருக்கும் கற்றுக் கொடுப்பதுதான் இஸ்லாமாகும்.

**வணக்கங்களின் பிரதிபலிப்பு.**

மேற்கூறப்பட்ட வணக்கவழிபாடுகளில் நாம் ஈடுபடும் போது அவைகள் ஏற்படுத்தும் தாக்கங்களையும், பிரதிபலிப்புக்களையும் நம்மிலும், நமது வாழ்விலும் காணமுடிகின்றது. அத்தோடு ஏனையோர்களது வாழ்விலும், தனக்கு சூழாலுள்ள வாழ்க்கை வட்டத்திலும் பிரதிபலித்துக் கொண்டிருப்பதையும் கண்டு கொள்ளலாம். அவ்வாறான பிரதிபலிப்புகளில் மிகவும் முக்கியமானவையாக இரண்டைக் குறிப்பிடலாம்.

1. மேற்கூறப்பட்ட வணக்கங்கள் மனிதனுடைய வாழ்வையும், அவனது அனைத்து செயற்பாடுகளையும் இறைவன் விரும்பக்கூடிய ஒன்றாக ஆக்கிவிடுகின்றன. மேலும் அவனது செயற்பாடுகளை அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தியவனாகவும், அச்செயல்களில் ஈடுபடும்போது அல்லாஹ்வுக்கென்ற அச்ச உணர்வுடன் ஈடுபடக்கூடியவனாகவும் மாற்றி விடுகின்றன. அவ்வாறான முறையில் அவன் ஈடுபடும்போது ஏனைய நற்கிரியைகளையும் அதிகதிகமாக செய்ய வேண்டும் என அவனைத் தூண்டிக் கொண்டிருக்கின்றன. மேலும் அவனுக்கும், அவனது குழந்தைகளுக்கும் உலக விஷயங்களில் எவைகளெல்லாம் பிரயோஜனமளிக்குமோ அவைகளை அடைந்து கொள்ளவும் வழிவகுக்கின்றன. அத்தோடு அவனை இறைவனிடம் நெருக்கமாக்கியும் வைக்கின்றன. மேலும் அவன் அன்றாடம் செய்துவரும் உலக விஷயங்களையும் அல்லாஹ்

வுக்கென்ற தூய எண்ணத்தோடு செய்ய வேண்டுமென அவனைத் தூண்டிக் கொண்டிருக்கின்றன.

2. மேற்கூறப்பட்ட வணக்கங்களில் அவன் ஈடுபடுகையில் ஒரே இறைவனின் பக்கம் திரும்பவும், ஒரே குறிக்கோளில் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் வழிவகுக்கின்றன. மேலும் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நடக்க வேண்டும் என்ற ஒரே கொள்கையின் பால் அவனை இட்டுச் செல்கின்றன. அதனடிப்படையில் அவன் செயல்படுகையில் அவன் செய்யும் கடமைகள், விலக்கல்கள் அனைத்தையும் அல்லாஹ்வுக்கென்ற தூய்மையான உள்ளத்துடன் செய்ய முனைகின்றான். மேலும் அவனது இம்மை, மறுமை சம்பந்தப்பட்டவைகளையும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே செய்ய வேண்டும் என்ற மனஉறுதியையும் ஏற்படுத்துகின்றன. அவ்வாறு அவன் செயல்படும்போது அவனிலோ, அல்லது அவனது வாழ்விலோ எவ்வித குழப்பங்களும், எவ்வித பிரச்சினைகளுமின்றி சிறந்தமுறையில் வாழ்ந்து வருகின்றான். அதற்குரிய முக்கிய காரணம்:

- அவன் இரவில் மாத்திரம் அல்லாஹ்வை வணங்கி விட்டு பகற்பொழுதுகளில் சமுதாயத்தவர்களை வணங்குபவனல்ல.
- அவன் பள்ளிகளில் அல்லாஹ்வை வணங்கிவிட்டு வாழ்க்கை வட்டத்தில் உலகையும், அதிலுள்ளவைகளையும் வணங்குபவனல்ல.
- வாரத்தில் ஒருநாள் மாத்திரம் அல்லாஹ்வை வணங்கிவிட்டு ஏனைய நாட்களில் அவனல்லாதோரை வணங்குபவனல்ல.

அவைகளுக்கு மாறாக அவன் எங்கிருந்த போதிலும், எப்படியிருந்த போதிலும், எல்லா நேரங்களிலும், எவ்வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் அல்லாஹ்வை மாத்திரமே வணங்கி வழிப்படுவான். அவ்வாறிருக்கையில் அவன் எல்லா நிலைகளிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், எல்லாக் காலங்களிலும் அல்லாஹ்வின் புறமே தனது முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கின்

றான். அல்லாஹுத்தஆலா கூறுகின்றான். மேலும் கிழக்கும், மற்றும் மேற்கும் அல்லாஹ்வுக்கே உரியன. எனவே நீங்கள் (தொழுகைக்காக) எங்கு திரும்பினும் அங்கே அல்லாஹ்வின்(சங்கையான) முகம் இருக்கின்றது(2.115).

அல்லாஹுத்தஆலாவின் இவ்வாக்குக்கமைய எப்போதும் அம்மனிதனின் உள்ளம் அல்லாஹ்வுடன் தொடர்புற்றிருக்கும். அவனது அனைத்து முயற்சிகளும் அவன் பக்கமே இருந்து கொண்டிருக்கும். இவ்வாறிருப்பதால் அவனது உள்ளமோ, அல்லது அவனது வாழ்வோ, அல்லது அவனது சிந்தனைகளோ வல்ல நாயனை விட்டுவிட்டு வேறொரு பாதையில் பிரிந்து செல்லமாட்டாது. ஏனெனில் அவனது வாழ்க்கையே பிளவுபடாதவாறு அல்லாஹ்வின் புறத்தால் ஒருமுகப் படுத்தப்படுகின்றது. அவ்வாறு ஒருமுகப்படுத்தப்பட்டால் எப்போதும் அவனது நிலை அல்லாஹ்வை வணங்குவதாகவும், அவனது எதிர்பார்ப்பு அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெற்றுக் கொள்வதாகவும் இருப்பதோடு அவனது வாழ்க்கையே குர்ஆன் கூறும் வழி காட்டலின் பிரகாரம் ஆகிவிடுகின்றது.

முஹம்மத் அசத் எனும் ஆசிரியர் இஸ்லாமிய வணக்கத்தின் சிறப்பைப்பற்றிக் கூறுகையில், இஸ்லாமிய வணக்கங்கள் ஏனைய மதங்களிலுள்ள வணக்கங்களைப் போன்றல்லாது அவைகளிலிருந்து மிகவும் மாறுபட்ட ஒன்றாகவே இருந்து கொண்டிருக்கின்றது எனக்கூறுகின்றார். ஏனெனில் இஸ்லாம் கூறக்கூடிய வணக்கங்களான தொழுகை, நோன்பு, ஸகாத் போன்றவைகளை ஒருவன் பயபக்தியுடன் நிறை வேற்றுவதின் மூலம் மாத்திரம் அல்லாஹ்வை வணங்கி விட்டவனாகக் கருதப்பட மாட்டான். மாறாக மனிதனது வாழ்வில் நடக்கும் எல்லாக் காரியங்களையும் இஸ்லாம் வணக்கமாகவே கருதிக்கொண்டிருக்கின்றது. ஆதலால் தான் நமது வாழ்வின் அனைத்து நடவடிக்கைகளும் அல்லாஹுத்தஆலாவை வணங்கி வழிப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இருந்து கொண்டிருக்கின்றன.

அப்படிப்பட்ட ஒரு நிலையில் நாம் இருந்து கொண்டிருப் பதனால் நமது வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் சிந்தித்து அவையனைத்தும் வணக்கம் என்பதையும், அல்லாஹுத்தஆலா ஏற்படுத்திய வழிமுறையின் ஒரு பகுதி என்பதையும் கவனத்தில் கொண்டு வணங்கி வழிப்பட வேண்டியவர்களாக இருக்கின் றோம். அக்கூற்றை சிறந்த முறையில் சிந்திக்கின்ற சாதாரண மனிதனும் ஏற்றுக் கொள்கின்றான்.

மேலும் இஸ்லாம் ஏனைய மதங்களிலிருந்தும், உலக நடை முறைகளிலிருந்தும் வேறுபட்டுக் காணப்படுகின்றது என்பதற்கு பின்வரும் உதாரணத்தைக் கூறலாம். அதாவது இஸ்லாம் அல் லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைக் கற்றுக் கொடுக் கும் மார்க்கம் என்ற அடிப்படையில் மனிதன் இறைவனுக்குச் செய்ய வேண்டியவைகளை மாத்திரம் செய்து விட்டால் அவன் உரிய முறையில் வணக்கத்தை நிறைவேற்றியவனாகக் கருதப் படமாட்டான். மாறாக உலக சம்பந்தப்பட்டவைகளில் தனிப்பட்ட மனிதரோடும், சமுதாயத்தினரோடும் தொடர்புள்ளவைகளையும் கவ னத்தில் கொண்டு செயல்பட வேண்டியிருக்கின்றான். அவ்வாறு செயல்படும் போதுதான் அவன் உரிய முறையில் இஸ்லாத்தைப் பின்பற்றியவனாகக் கருதப்படுகின்றான்.

ஏனெனில் உலக வாழ்க்கையை திடீரெனத்தோன்றிய இயற் கையின் வெளிப்பாடு என்றோ, அல்லது மறுமைக்குமுன் இருக் கும் கற்பனை வாழ்க்கை என்றோ, அல்லது எவ்வித கருப் பொருளும் இல்லாத மாயை என்றோ நாம் எடைபோட்டு விடக் கூடாது. மாறாக தனித்துவமிக்க, பூரணமான ஒரு நோக்கத்தை உள்ளடக்கிய வாழ்க்கையாகவே அவ்வாழ்க்கை இருந்து கொண்டிருக்கின்றது.

மேலே நாங்கள் கூறியது போன்று இஸ்லாமிய வணக்கம் விரிவானதொரு கருத்தைக் கொண்டிருப்பதால் மனிதனுடைய உலக வாழ்க்கையும் வணக்கம் என்ற அடிப்படையில் கணிக்கப் படுகின்றது. அதனை இம்மனித சமுதாயம் சரியான முறையில் அறிந்து உலக வாழ்வில் செயல்படுவதின் மூலம் ஏனைய மதங்

களும், உலக நடைமுறைகளும் மனிதன் உலக வாழ்க்கையில் பரிபூரணமானவனல்ல எனக்கூறும் கருத்துக்கு மாற்றமாக இஸ்லாம் கூறும் அடிப்படையில் மனிதன் உலகிலும் பரிபூரணமானவன் என்ற உண்மையை நிரூபிக்கலாம்.

ஏனெனில் மனிதனது அந்த பரிபூரணத்தன்மையை அடைந்து கொள்ள இந்து மதம் கூறுவது போன்று தனது உடல் ஆசைகளை அழித்துக்கொள்ள வேண்டுமென்றோ, அல்லது பலமுறை அவதாரம் எடுக்க வேண்டுமென்றோ இஸ்லாம் கூறவில்லை. மாறாக மனிதன் உலகில் பிறந்த நோக்கத்தை அறிந்து அவனது வாழ்க்கை முழுவதையும் பிரயோஜனப்படக் கூடிய முறையில் மாற்றிக் கொள்ளும் போது அவன் இவ்வுலகிலேயே பரிபூரணத் தன்மையை அடைந்து கொள்கின்றான் எனப்பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது எனக்கூறி முடிக்கின்றார்.

**மனித செயற்பாடுகளும் வணக்கங்களாகும்.**

இஸ்லாம் கூறும் வணக்கத்தின் இரண்டாம் பகுதி.

மனிதனது வாழ்வை இஸ்லாம் எவ்வாறு வணக்கமாகக் கருதுகின்றதோ அதேபோன்று அவனது அனைத்து செயற்பாடுகளையும் வணக்கமாகவே கருதிக் கொண்டிருக்கின்றது. அதனடிப்படையில் முஸ்லிமான ஒருவன் தனது உள்ளம், சிந்தனை, பேச்சு, பார்வை, கேள்வி இவை போன்ற அவனது அனைத்து உடலுறுப்புக்களாலும், அவனது சொத்து, செல்வங்களை இஸ்லாம் ஆகுமாக்கிய வழிகளில் செலவு செய்யும்போது அச்செல்வத்தாலும், இஸ்லாத்துக்காக தனது குடும்பத்தையும், நாட்டையும் விட்டு பிரியும் போது அப்பிரிவாலும் இவ்வாறாக அவனது அனைத்து செயற்பாடுகளாலும் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருக்கின்றான்.

ஒரு உண்மையான முஸ்லிம் தன்னையும், அல்லாஹுத்தஆலாவையும், அவனால் படைக்கப்பட்டவைகளையும் பற்றி கட்டாயம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றான். அத்துடன் அவன் மனிதர்களுக்கு அருட்கொடையாகவும், நேர் வழிகாட்டியாகவும் இறக்கிய குர்ஆனையும் ஆராய்ந்து சென்ற சமுதாயங்கள் எவ்

வாறு வாழ்ந்தார்கள்? அவர்களது நடைமுறைகள் எவ்வாறிருந் தன? அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளையும், சட்டதிட்டங் களையும் ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் எவ்வாறு அவன் அவர்களைத் தண்டித்தான்? என்பவைகளையும் சிந்தித்து படிப் பினை பெறக் கடமைப்பட்டிருக்கின்றான். அவ்வாறு நடந்து கொள்வதின் மூலமாகவும் அம்மனிதன் தன்னைப் படைத்தவனை வணங்கி வழிப்படுகின்றான். அத்தோடு தனது செயற்பாடுகளை அல்லாஹ்வுக்குரிய வணக்கமாக மாற்றி அவனுக்கு நெருங்கிய அடியார்களில் உள்ளவனாகவும் ஆகிவிடுகின்றான். இவ்வாறு மனிதகுலம் அனைத்தும் மாற வேண்டும் என்பதற்காகத்தான் அல்லாஹுத்தஆலா இறக்கிவைத்த குர்ஆனை ஆராய்ந்து பார்க் குமாறு அவனே நமக்கு கட்டளையிட்டுக் கொண்டிருக்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான் இக்குர்ஆனுடைய வசனங்களை அவர் கள் சிந்திப்பதற்காகவும், (இதனைக் கொண்டு) அறிவுடையோர் நல்லுபதேசம் பெறுவதற்காகவும் நாம் இதை உம்மீது இறக்கி வைத்தோம்(*38.29*).

நம் சிந்தனைக்கு சற்று வேலை கொடுத்து சிந்தித்து, செயல்படுமாறும் அல்குர்ஆன் நம்மைப் பணித்துக் கொண்டிருக் கின்றது. அல்லாஹ் கூறுகின்றான். மேலும் உறுதி(யாக விசுவா சங்)கொண்டவர்களுக்குப் பூமியில் அத்தாட்சிகளிருக்கின்றன. மேலும் உங்களுக்குள்ளேயும்(பலஅத்தாட்சிகள் இருக்கின்றன. அவைகளை) நீங்கள் (கவனித்துப்) பார்க்க மாட்டீர்களா? (51.20–21)

மற்றுமொரு இடத்தில் பின்வருமாறு கூறிக் கொண்டிருக் கின்றான். நிச்சயமாக வானங்கள், மற்றும் பூமியைப் படைத்திருப் பதிலும், இரவும், பகலும் மாறிமாறி வருவதிலும், அறிவுடை யோருக்குப்பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (அறிவுடைய) அத் தகையோர் நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும், தங்கள் விலாப்புறங்களின் மீது (சாய்ந்து)ம் அல்லாஹ்வையே நினைத்து வானங்கள் மற்றும் பூமியின் படைப்பைப் பற்றியும் சிந்தித்து, எங்கள் இரட்சகனே! நீ இவற்றை வீணுக்காகப் படைத்து விட

வில்லை. நீ மிகத்தூயவன். (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களை நீ காத்தருள்வாயாக! (என்றும் பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்கள்)(3.190–191).

ஓரிடத்தில் இப்னு அப்பாஸ்(ரலி)அவர்கள் கூறுகையில், ஒருவன் ஒரு மணித்தியாளம்(அல்லாஹ்வின் அத்தாட்சிகளைப்பற்றி) சிந்திப்பது அவன் இரவில் நின்று வணங்குவதைவிட சிறந்ததாகும் எனக்கூறுகின்றார்கள்(இப்னுஹிப்பான்). மற்றுமொரு இடத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், எவன் மார்க்க அறிவைத்தேடி ஒரு பாதையில் வெளிக்கிட்டுச் செல்கின்றானோ அவனுக்கு அல்லாஹுத்தஆலா சுவனத்துக்குரிய பாதையை இலேசாக்கி வைக்கின்றான் எனக்கூறுகின்றார்கள்(அஹ்மத்).

இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் கூறுகையில், மார்க்க அறிவைத் தேடிப்படிப்பது சுன்னத்துத் தொழுகைகளைத் தொழுவதைவிட சிறந்ததாகும் எனக்கூறுகின்றார்கள். வேறோரு இடத்தில் வஹ்ப் (ரஹ்) அவர்கள் அறிவிக்கையில், நான் மாலிக் (ரஹ்) அவர்களிடம் பாடம் படித்துக் கொண்டிருக்கும்போது, நான் படித்துக் கொண்டிருந்த பலகையை மடித்து விட்டு சுன்னத்துத் தொழுவதற்காக எழுந்து சென்று கொண்டிருந்தேன். அதைக் கண்ணுற்ற மாலிக் (ரஹ்) அவர்கள் என்னைப் பார்த்து, நீங்கள் செய்து கொண்டிருந்த செயலைவிட தற்போது செய்யவதற்குச் சென்று கொண்டிருக்கும் செயல் சிறந்ததல்ல எனக்கூறியதாக அறிவிக்கின்றார்கள்(மித்ராஜுஸ்ஸாலிகீன்).

ஒரு உண்மையான முஸ்லிம் அல்லாஹ்வை நேசித்தும், அஞ்சி நடந்தும், அவனது அருளை ஆசித்தும், தண்டனைகளைப் பயந்தும் வாழ்ந்து வரவேண்டும். மேலும் அவனது ஏற்பாடுகள் நன்மைகளாக, அல்லது சோதனைகளாக இருந்த போதிலும் அவைகள் அனைத்தையும் பொறுமையுடன் மனதார ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் அவன் தனக்களித்த அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தியும், தனது காரியங்கள் அனைத்தையும் அவனிடமே ஒப்புவித்தும், அவனுக்கென்ற தூய உள்ளத்துடன் செயல்பட்டும் வரவேண்டும். அவ்வாறு நடக்கும்

போது உள்ளம் சம்பந்தப்பட்டவைகளால் அல்லாஹுத்தஆலாவை வணங்கி வழிப்பட்டவனாக ஆகிவிடுகின்றான். அல்லாஹ் கூறு கின்றான். இன்னும் அல்லாஹ்வை அவனுக்காகவே வணக்கத் தைக் கலப்பற்றதாக ஆக்கியவர்களாக (அனைத்து தீய வழி களை விட்டும் நீங்கி இஸ்லாத்தின்பால்) சாய்ந்தவர்களாக அவர் கள் அல்லாஹ்வை வணங்குவதற்காகவே தவிர அவர்கள் கட்ட ளையிடப்படவில்லை(*98.5*).

வேறொரு இடத்தில் இவ்வாறு கூறுகின்றான். நிச்சயமாக என்னுடைய தொழுகையும், என்னுடைய அறுப்பு(குர்பானியும், என் வாழ்வும், என் மரணமும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே உரித்தானவையாகும் என்று (நபியே) நீர் கூறு வீராக! அவனுக்கு யாதோர் இணையுமில்லை. (துணையு மில்லை) இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன்(*6.162–163*).

அம்மனிதன் அல்லாஹ்வை திக்ர் செய்தும், அவன் இறக்கி வைத்த அல்குர்ஆனை ஓதியும், அவனிடம் பிரார்த்தித்தும், அவனை தஸ்பீஹ் செய்து துதிப்பதின் மூலமும் அவனை நாவி னால் வணங்கிக் கொண்டிருக்கின்றான். இறைவிசுவாசிகள் அவ் வாறுதான் இருக்க வேண்டுமென அல்லாஹுத்தஆலா பின்வரு மாறு கூறுகின்றான். விசுவாசிகளே! அல்லாஹ்வை அதிகமான நினைவு கூறுதலாக நினைவு கூறுங்கள். காலையிலும் மாலையி லும் அவனைத் துதி செய்யுங்கள்(*33.41–42*).

மேலும் கூறுகின்றான். (நபியே!) உம்மனதிற்குள் மிக்க பணி வோடும், பயத்தோடும் (மெதுவாக) சொல்லில் உரத்த சத்தமின்றி யும் காலையிலும், மாலையிலும் உமதிரட்சகனை நினைவு கூர்வீ ராக!(அவனை)மறந்திருப்போரில் நீர் ஆகியும் விடாதீர்(7.205).

நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், நீங்கள் குர்ஆனை ஓதுங்கள். அது உங்களுக்கு மறுமையில் அல்லாஹ்விடம் சிபா ரிசு செய்யும் எனக்கூறுகின்றார்கள்(முஸ்லிம்,அஹ்மத்).

வேறொரு அறிவிப்பில் ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களி டம் வந்து அல்லாஹ்வின் தூதரே! இஸ்லாத்தின் சட்ட, திட் டங்கள் எனக்கு அதிகமாகத் தோன்றுகின்றன. நான் தினமும்

செய்து வரக்கூடிய இலேசான ஒன்றைக் கற்றுத் தாருங்கள் எனக்கூறினார். அதைச்செவியுற்ற நபியவர்கள் அவரைப் பார்த்து எந்நேரமும் நீ அல்லாஹ்வை தியானித்துக் கொண்டிருப்பாயாக! எனக்கூறினார்கள்(திர்மிதி).

மேலேயுள்ள ஹதீஸ் கூறுவதற்கினங்க நாம் அல்லாஹுத்த ஆலாவை தியானிப்பதென்றால் அதற்கு இரு வழிமுறைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகள் பின்வருமாறு:

1. பின்வரும் திக்ரு போன்றவைகளை ஓதி அல்லாஹுத்த ஆலாவை தியானித்தல்.

سُبْحَانَ اللهِ وَالْحَمْدُ للهِ وَلاَ اِلهَ إِلاَّ اللهُ وَاللهُ أَكْبَرُ

சுப்ஹானல்லாஹி, வல்ஹம்து லில்லாஹி, வலாஇலாஹ இல் லல்லாஹு வல்லாஹுஅக்பர்

பொருள்: இறைவா! நீ தூய்மையடைந்து விட்டாய். எல்லாப் புகழும் உனக்கே உரித்தானதாகும். உன்னைத் தவிர வணக் கத்துக்குரிய நாயன் வேறெவரும் இல்லை. நீயே மிகப் பெரிய வனாகும்.

2. கீழ்வரும் திருவசனத்திலுள்ளதின் பிரகாரம் அவனைப் பிரார்த் தித்து அழைத்தல். எங்கள் இரட்சகனே! எங்களுக்கு நாங் களே அநீதமிழைத்துக் கொண்டோம். நீஎங்களை மன்னித்து எங்களுக்கு அருள் புரியாவிடில் நிச்சயமாக நாங்கள் நஷ்டம டைந்தவர்களில் ஆகிவிடுவோம்(7.23).

அவ்விருவகையான தியானத்திலும் மனிதனது உள்ளமும், நாவும் தினமும் நிலைத்திருக்க வேண்டும் என்ற அடிப்படை யில்தான் அவன் தூங்கும்போதும், தூங்கி எழும்பும் போதும், காலையிலும், மாலையிலும், உண்டு, குடிக்கும் போதும், பிரயா ணம் மேற்கொள்ளும் போதும், ஆடையணியும் போதும், வாக னத்தில் ஏறும் போதும், பலமான காற்று வீசும் போதும், மழை பெய்யும் போதும் எல்லா நேரங்களிலும் ஓதிவரக்கூடிய ஏராளமான திக்ருகளை நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள்.

இதேநேரம் நாம் மற்றுமொரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது நாம் செய்யும் தியா

னங்(திக்ரு)களில் மிகவும் சிறப்புக்குரிய தியானம் யாதெனில் நமது உள்ளமும், நாவும் ஒருமித்து சிறந்த ஈடுபாட்டோடு செய்யக்கூடிய தியானமாகும். எனவே நமதுள்ளங்கள் உலக விஷயங்களை சிந்தித்துக் கொண்டிருக்கையில் நமது நாவு மாத்திரம் அசைந்து கொண்டிருப்பதில் எவ்வித சிறப்பும் கிடையாது.

ஒருவன் தனது ஆசைகளையும், மனோஇச்சைகளையும் கட்டுப்படுத்தியவனாக தனக்கு கடமையாக்கப்பட்ட நோன்பை நோற்பதின் மூலமும், தனது உடல் உறுப்புக்களை அசைத்து அல்லாஹ்வை நின்று வணங்கு(தொழு)வதின் மூலமும் தனது அனைத்து உடலுறுப்புக்களாலும் அல்லாஹ்வை வணங்கியவனாகின்றான். மேலும் அவன் தன்னிடத்திலுள்ள செல்வங்களைக் கணக்கிட்டு அவைகளுக்குரிய ஸகாத்தை நிறை வேற்றும்போது தனது செல்வத்தாலும் வல்ல நாயனை வணங்கி வழிப்பட்டவனாக ஆகின்றான். இதனைத்தான் இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், தொழுகை நோன்பு போன்றவைகளை உடல் சம்பந்தப்பட்ட வணக்கங்கள் என்றும், ஸகாத்தை செல்வம் சம்பந்தப்பட்ட வணக்கம் என்றும் பிரித்துக் கூறுகின்றனர்.

இஸ்லாம் கூறும் எவ்வணக்கத்தை நாம் மேற்கொள்வதாயிருந்தாலும் அவைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குரிய நிபந்தனைகளில் ஒன்றான உள்ளத்தோடு சம்பந்தப்பட்ட நிய்யத் எனும் எண்ணம் அவசியம் என இஸ்லாம் நம்மைப் பணித்துக் கொண்டிருக்கின்றது. அதனடிப்படையிலேயே பைத்தியக்காரன் செய்துவரும் வணக்கங்களையும், போதையில் மிதந்து கொண்டிருப்பவன் செய்துவரும் வணக்கங்களையும் இஸ்லாம் வணக்கங்களாகக் கருதுவதில்லை. அதனைத் தெளிவுபடுத்தும் முகமாகத்தான் அல்லாஹுத்தஆலாவும் பின்வருமாறு கூறிக்காட்டுகின்றான். நீங்கள் கூறுவது இன்னதென்று அறிந்து கொள்ளும் வரை(4.43).

இஸ்லாத்தை மார்க்கமாக ஏற்றுக் கொண்ட ஒருவன் ஏனையோரை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றான். அல்லது அவர்களுக்கு நல்லதை ஏவி, அவர்கள் தீயதைச் செய்வதை விட்டும்

தடுக்கின்றான். அல்லது இறைநிராகரிப்பாளர்களுக்கும், நயவஞ்சகர்களுக்கும் எதிராக போர் செய்கின்றான். அல்லது அல்லாஹுத்தஆலாவின் வார்த்தைகளை மேலோங்கச் செய்வதற்காக எவ்வழிகளிலெல்லாம் தன்னை அர்பணிக்க முடியுமோ அவ்வழிகளில் அர்பணித்து வாழ்கின்றான். மேற்கூறப்பட்டவைகளின் மூலமாகவும் அவன் வல்ல அல்லாஹ்வை வணங்கி வழிப்பட்டு வருபனாகவே இருந்து கொண்டிருக்கின்றான்.

ஒருவன் ஹஜ், உம்ரா போன்ற வணக்கங்களை நிறைவேற்றச் செல்கின்றான். அல்லது இணைகளும், இறைநிராகரிப்புகளும் நிறைந்திருக்கும் தனது ஊரை விட்டுவிட்டு இஸ்லாமிய சட்ட, திட்டங்கள் பின்பற்றப்படக்கூடிய ஊருக்கு ஹிஜ்ரத் செய்கின்றான். அல்லது அல்லாஹ்வின் பாதையில் போர் செய்யச் செல்கின்றான். அல்லது தனக்கும், பிறருக்கும் பிரயோஜனமளிக்கும் அறிவைத் தேடிச்செல்கின்றான். இப்படிப்பட்டவைகளுக்கு தனது தாய், தந்தை, மனைவி, மக்கள் போன்றோரையும், சொத்து செல்வங்களையும் மொத்தத்தில் தனது நாட்டையும் விட்டுவிட்டு வெளியேறும் போதும் அவைகளின் மூலமும் அவன் அல்லாஹுத்தஆலாவை வணங்கி வழிப்படுபவனாகவே கருதப்படுகின்றான்.

**சிறந்த வணக்கம்.**

மேற்கூறப்பட்டவைகள் அனைத்தும் இஸ்லாமிய வணக்கங்கள் என்பதனை அறிந்து கொண்ட நாம், அவ்வணக்கங்களில் மிகவும் சிறந்ததும், அல்லாஹுத்தஆலாவுக்கு மிகவும் விருப்பமானதும், அவனிடத்தில் மிகவும் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கக்கூடியதுமான வணக்கம் யாவை? என்பதனையும் அறிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மேலேயுள்ள வினாவுக்கு விடையாக மார்க்க அறிஞர்கள் பல கோணங்களில் சிந்தித்து, அவைகளுக்குரிய ஆதாரங்களைத் திரட்டி இவைதான் அந்த வணக்கங்களாக இருக்க வேண்டுமென அவர்களது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். அவ்வாறு அவர்கள் கூறிய கருத்துக்களையும், அவர்கள் அதற்காக எடுத்துக் கொண்ட ஆதாரங்களையும் இமாம் இப்னு கையும்

(ரஹ்) அவர்கள் கூறிவிட்டு, இறுதியில் அனைவருக்கும் சரியா கப்படக்கூடிய, அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவாறு இருக்கும் சரியான கருத்தையும் தெளிவாகக் கூறுகின்றார்கள்.

உன்னையே வணங்கி, உனது கட்டளைகளுக்கே அடி பணிந்து நடக்கின்றோம் எனக்கூறி அல்லாஹ்வை வணங்கி வருபவர்கள் தாம் செய்யும் வணக்கங்களில் அல்லாஹ்வுக்கு மிக வும் விருப்பமான வணக்கங்கள் எவையென்பதைக் கூறும் விஷ யத்தில் நான்கு பிரிவினர்களாகப் பிரிந்து காணப்படுகின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் சரியாகக் காணும் தத்தமது வணக் கங்களைக்கூறி இவைதான் அல்லாஹ்வினால் மிகவும் விரும்பப் படக்கூடிய வணக்கங்கள் எனக்கூறி வருகின்றார்கள். அந்நான்கு பிரிவினரும் கூறும் நான்கு வழிமுறைகளையும் நீங்களும் அறிந்து கொள்வதற்காக இங்கு குறிப்பிடுகின்றேன்.

- **கஷ்டமான வணக்கங்களே சிறந்த வணக்கமாகும்.**

இவ்வாறு கூறக் கூடியவர்கள் முதலாவது கூட்டத்தினராவார் கள். அவர்களின் கருத்துப்படி தமக்கு அதிகபட்சமாக பிரயோஜன மளிக்கும் வணக்கங்களாகவும், அல்லாஹுத்தஆலாவிடம் மிகவும் விருப்பத்திற்குரிய வணக்கங்களாகவும் கருதப்படக்கூடிய வணக் கம் யாதெனில், தான் அவ்வணக்கத்தைச் செய்ய முனைந்தால் இலகுவான முறையில் அதனை செய்துமுடிக்க முடியாது. மாறாக அதற்காக பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கும். அவ்வாறு பல கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் மத்தியில் செய்யும் வணக்கங்கள்தான் சிறந்த வணக்கங்களாகும் எனக் கூறுகின்றார்கள். காரணம் அவ்வாறு செய்யும் அவ்வணக்கங்க ளில் ஈடுபடும் ஒருவன் தனது மனோஇச்சைக்கும், ஆசாபாசங்க ளுக்கும் அப்பாலிருந்தே அவைகளைச் செய்து முடிக்கின்றான். அவ்வாறாக அவன் நிறைவேற்றும்போது உண்மையில் அல்லா ஹுத்தஆலா விரும்பக்கூடிய ஒரு வணக்கத்தை நிறைவேற்றியவ னாகவே கருதப்படுகின்றான். அதுமட்டுமின்றி அவ்வணக்கத்தை அவர்கள் நிறைவேற்றி முடிப்பதற்கு எந்தளவு கஷ்டப்பட்டார்

களோ அதனடிப்படையில்தான் அவர்களுக்கு கூலிகளும் வழங்கப் படுகின்றன எனக்கூறுகின்றார்கள்.

அவர்களது அக்கருத்தை நியாயப்படுத்துவதற்காக, நற்கிரி யைகளில் சிறந்தது மிகவும் கஷ்டமான நற்கிரியையாகும் என்ற இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸை ஆதாரமாகமுன்வைக்கின்றார்கள். (இந்த ஹதீஸின் கருத்துக்கு ஒத்த கருத்தைக் கொண்ட வேறொரு ஹதீஸ் வேறொரு அறிவிப்பில் இடம் பெற்றிருப்பதால் இந்த ஹதீஸை ஆதாரமாக எடுத்துக் கொள்ளலாமா? எனும் விஷயத்தில் மார்க்க அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொண்டி ருக்கின்றார்கள்). மேலும் அவர்களது இவ்வாறான வணக்கங்க ளின் மூலம் அவர்கள் தத்தமது ஆன்மாக்களை கட்டுப்படுத்தி பாதுகாத்துக் கொள்கின்றார்கள் என்றும் கூறி வருகின்றார்கள்.

தொடர்ந்து அவர்கள் கூறுகையில், மனித உள்ளங்களின் அடிப்படையே சோம்பலாயிருப்பதும், செயலற்றுக் கிடப்பதுமாகும். எப்போது மனிதன் இவ்வாறு கஷ்டமான வணக்கங்களில் ஈடு படுகின்றானோ அப்போதுதான் அவ்வுள்ளங்கள் சிறந்த முறையில் உற்சாகத்துடன் செயல்பட ஆரம்பிக்கின்றன. எனவே அவ்வுள்ளங் கள் சிறந்த முறையில் செயல்பட வேண்டுமெனில் அவசியம் கஷ் டமானவைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் அப்போதுதான் அவைகள் சீராக செயல்படும் என கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.

- **பற்றற்றிருப்பதே சிறந்த வணக்கமாகும்.**

இவ்வாறு கூறுவோர் இரண்டாவது கூட்டத்தினர்களாகும். அவர்களது கருத்தின்படி வணக்கங்களில் அல்லாஹ்வுக்கு மிக வும் விருப்பமான வணக்கம் உலகத்தையும், அதிலிருப்பவைக ளையும் அதிகம் நேசிக்காமலும், அவைகளிலே அதிகம் ஈடுபாடு கொள்ளாமலும், அதிலுள்ளவைகளை அதிகதிமாகப் பெற்றுக் கொள்ள ஆசை கொள்ளாமலும் வெறுத்து ஒதுங்கியிருப்பதாகும் எனக்கூறுகின்றார்கள். இக்கருத்தைக் கூறுபவர்கள் இரு பிரிவின ராகப் பிரிகின்றனர். அவர்கள் பின்வருமாறு:

1. பொதுமக்கள்: இவர்களைப் பொறுத்தவரையில் இவ்வாறு உலக ஆசாபாசங்களை விட்டும் நீங்கி துரவறம் பூண்டிருப்

பதனையே குறிக்கோளாகக் கொண்டு அதன்பிரகாரம் நடந்து வருகின்றார்கள். அத்தோடு அவ்வாறு நடந்து கொள்ளுமாறு ஏனையோரையும் ஆர்வமூட்டிக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் அவ்வாறு துரவறம் பூண்டிருப்பதை மார்க்க அறிவைக் கற்றுக் கொள்ளுதல், இதர வணக்கங்களில் ஈடுபடுதல் போன்றவைகளை விடவும் சிறந்ததாகக் கணிக்கின்றார்கள். அத்துடன் அவர்கள் துரவறத்தைத்தான் வணக்கங்களின் தலையாய வணக்கமாகவும் கருதுகின்றார்கள்.

2. பொது மக்கள்தான் என்றாலும் முதலாமவர்களிலிருந்து சற்று மாறுபட்டவர்கள்: இவர்களைப் பொறுத்தவரையில் துரவறம் என்பது அல்லாஹ்வைத் தியானிப்பதற்கு உள்ளத்தையும், முயற்சியையும் ஒருமுகப்படுத்தி விடுவதாகும். அத்தோடு அவனை அதிகதிகம் நேசிப்பார்கள். மேலும் அவனிடமே தாம் செய்த தவறுகளுக்காக பாவமன்னிப்பும் தேடுவார்கள். மேலும் தமது அனைத்துப் பொறுப்புக்களையும் அவனிடமே ஒப்படைத்து அவன் விரும்பக் கூடியவைகளில் தமது வாழ்வை அமைத்துக் கொள்வார்கள். அந்த அடிப்படையில் அவர்களிடம் சிறந்த வணக்கமாகக் கருதப்படுவது தமது சிந்தனைகளை அல்லாஹ்வுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதாகும் எனக்கூறுகின்றார்கள். அவ்வாறு இணைந்து உள்ளத்தையும், நாவையும் வேறுதிசைகளில் அலையவிடாமல் அல்லாஹ் நம்மைப் கவனித்துக் கொண்டிருக்கின்றான் என்ற அச்சத்தோடு அவனை தியானித்து வருவதைத்தான் சிறந்த வணக்கமென்றும், அவை தவிர்ந்தவைகள் சிந்தனையைத் திசை திருப்பக் கூடியவைகள் என்றும் கூறி வருகின்றார்கள். இவ்வாறு கூறுபவர்களும் இரு கூட்டத்திரனராகப் பிரிகின்றனர். அவர்கள் முறையே:

- முதலாவது கூட்டத்தினர்: அறிந்து செயல்படுபவர்கள். அவர்கள் இஸ்லாம் கூறியிருக்கும் சட்டதிட்டங்களை அறிந்து கொண்டால் உடனே அவைகளை நடைமுறைப்படுத்தத்

தயாராகி விடுவார்கள். அச்சந்தர்ப்பங்களில் நாம் நம் உள்ளங் களை அல்லாஹ்வோடு ஒருங்கிணைத்திருக்கின்றோம், வேறு வணக்கங்களை நிறைவேற்றச் சென்றால் நமதுள்ளங்களின் சிந்தனைகள் சிதறடிக்கப்படும் என்றெல்லாம் சிந்திக்க மாட் டார்கள். மாறாக அக்கட்டளைகளையும், சட்ட, திட்டங்களை யும் உடனே நடைமுறைப்படுத்துவார்கள்.

- ○ இரண்டாவது கூட்டத்தினர் அவர்களிலும் சற்று மாறுபட்ட வர்கள்: இவர்கள் அல்லாஹ்வோடு தங்களது உள்ளங்களை ஒருங்கிணைத்துக் கொண்டவர்கள். அவர்களுக்கு மார்க்க சட்ட, திட்டங்களில் எவைகளை எடுத்துக் கூறப்பட்டாலும் அவைகள் அல்லாஹ்வுடைய தியானத்திலிருந்து அவர்களை பிரிக்கக்கூடியவையாக இருந்தால் ஒரு போதும் அவைகளின் பக்கம் தமது கவனத்தைச் செலுத்த மாட்டார்கள். இவர்களி லும் இரு தரப்பினர் இருக்கின்றனர். அவர்கள் முறையே:

- ■ முதலாவது கூட்டத்தினர்: தாம் தமது உள்ளத்தை அல் லாஹ்வோடு ஒருங்கிணைத்திருக்கின்றோம் என்ற எண்ணத் தில் அவர்களுக்கு அல்லாஹ்வின் புறத்திலிருந்து கடமை யாக் கப்பட்டவைகளை நடைமுறைப்படுத்தாது விட்டு விடுவார்கள்.
- ■ இரண்டாவது கூட்டத்தினர்: தமக்கு அல்லாஹ்வின் புறத்தி லிருந்து கடமையாக்கப்பட்டவைகளை மாத்திரம் செய்து வருவார்கள். ஆனால் அவர்கள் தங்களது உள்ளங்களை அல்லாஹ்வோடு ஒருங்கிணைத்திருக்கின்றார்கள் என்ற கார ணத்தினால் நபியவர்களது வழிமுறைகளையும், மார்க்க அறி வுகளைத் தேடிப்படிப்பதையும் விட்டுவிடுவார்கள்.

இந்த இரண்டாம் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் அவர்களுக்குத் தெரிந்த ஓர் பெரியாரிடம் சென்று பெரியாரே! நாம் நமது உள்ளத்தை அல்லாஹ்வோடு ஒருங்கிணைத்து தியானத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் தொழுகைக் காக பள்ளியில் பாங்கு சொல்லப்படுகின்றது. அந்நேரத்தில் நாம் தொழுகையை நிறைவேற்ற பள்ளிக்குச் சென்றால் நமது

உள்ளத்தின் சிந்தனை கலைக்கப்பட்டு விடுகின்றது. மாற்ற மாக நாம் பள்ளிக்குச் செல்லாமல் தியானத்தில் தொடர்ந்தி ருந்தால் நமது தியானம் பிரச்சினையின்றி தொடர்ந்து கொண் டிருக்கின்றது. எனவே இவையிரண்டிலும் எது மிகச் சிறந் தது? நாம் எதனைக் கடைபிடித்து நடக்க வேண்டுமெனக் கேட்டார்கள். அதற்கந்தப் பெரியார் விடையளிக்கையில், நீ அல்லாஹ்வின் அர்ஷுக்குக் கீழ் இருந்து கொண்டிருக்கும் போது பள்ளியில் பாங்கு சொல்லப்பட்டால் நீ எழுந்து அல் லாஹ்வின் அழைப்புக்கு பதில் கூறிவிட்டு பின்பு உனது இடத்துக்கு மீண்டுவிடு. ஏனெனில் அல்லாஹ்வோடு தமது உள்ளத்தை ஒருங்கிணைத்திருப்பது உயிருக்கும், உள்ளத் துக்கும் செய்கின்ற கடமையாகும். ஆனால் அல்லாஹ்வின் அழைப்புக்கு விடையளிப்பது, அல்லாஹ்வுக்கு மாத்திரம் செய்கின்ற கடமையாகும் எனக்கூறி விட்டு, எவன் தனது உள்ளத்துக்குச் செய்ய வேண்டிய கடமையை தனது இறை வனுக்குச் செய்ய வேண்டிய கடமையை விட மேம்படுத்தி விடுகின்றானோ அவன் இறைவா! உன்னையே வணங்குகின் றோம். உன்னிடமே உதவி தேடுகின்றோம் என்ற கூட்டத்தில் உள்ளவனாக மாட்டான் எனப் பதிலளித்தார்.

- **பிறருக்கு பயனளிப்பவைகளே சிறந்த வணக்கமாகும்.**

இவ்வாறு கூறுவோர் மூன்றாவது கூட்டத்தினராவார்கள். இவர்களது கருத்தின்படி வணக்கங்களில் மிகவும் சிறந்த வணக் கம், தான் செய்யும் செயல் தனக்கு மட்டுமின்றி பிறருக்கும் பிரயோஜனம் அளிக்கக்கூடிய தாயிருக்க வேண்டும். அவ்வாறிருக் கும் செயல்கள்தான் நாம் செய்யும் வணக்கங்களில் சிறந்த வணக்கங்களாக இருந்து கொண்டிருக்கின்றன எனக்கூறுகின்றார் கள். அவர்களது கருத்தின்படி ஏழைகளுக்கு உதவி செய்தல், மனிதர்களது தேவைகளை நிறைவேற்றி வைத்தல், அவர்களுக் குச் செய்து கொள்ள முடியாதவைகளை தன்னிடமிருக்கும் செல் வத்தாலோ, அல்லது அந்தஸ்தாலோ நிறைவேற்றிக் கொடுத்தல், நல்லவைகளைச் செய்யுமாறு அவர்களைப் பணித்தல் போன்றவை

கள்தான் வணக்கங்களில் சிறந்தவையாக இருந்து கொண்டிருக்கின்றன. அவர்களது அக்கருத்தை நியாயப்படுத்துவதற்காக பின் வரும் நபிவாக்குகளை ஆதாரமாக எடுத்துக் கூறுகின்றார்கள். ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், அல்லாஹ்வின் படைப்பிலுள்ளோர் அனைவரும் அல்லாஹ்வின் குடும்பத்தினராவார்கள். அவர்களில் அவனுக்கு மிகவும் விருப்பத்துக்குரியவர்கள் தனது குடும்பத்தவர்களுக்கு நன்மையளிப்பவைகளை செய்பவர்களாகும் எனக்கூறினார்கள்(அபூய∴லா).

இக்கருத்திலுள்ளோர் தொடர்ந்து கூறுகையில், வணக்க வழிபாட்டில் ஈடுபடும் ஒருவன் தனது வணக்கத்தின் மூலம் தனக்கு மாத்திரமே நன்மையைத் தேடுகின்றான். ஆனால் அவனுக்கு மாறாக ஏனையோர்களும் தன்னைப்போன்று நன்மையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவன் பிறருக்கும் அவைகளைக் கற்றுக் கொடுக்கின்றான். அப்போது அவைகளின் மூலம் தானும் நன்மைகளைப் பெற்று, தனது சகோதரனும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கின்றான். மேற்கூறப்பட்ட இருவரிலும் யார் சிறந்தவன்? இரண்டாமவனே சிறந்தவனாகும் எனக் கூறுகின்றார்கள்.

அதனை மையமாக வைத்தே ஒரு அறிஞன் வணக்கவாளியைவிட எவ்வளவு சிறப்பு வாய்ந்தவன் என்பதைக் கூறும்போது, நட்சத்திரங்களுக்கு மத்தியிலுள்ள சந்திரனுக்கு எவ்வாறான சிறப்பு இருக்கின்றதோ அதேபோன்ற சிறப்புதான் அந்த வணக்கவாளியிலும் பார்க்க அறிஞனுக்கு இருந்து கொண்டிருக்கின்றது எனக் கூறுகின்றார்கள்.

அவர்களது கருத்துக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் கூறுகையில், ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் அலி (ரலி) அவர்களைப் பார்த்துக் கூறுகையில், ஏ அலியே! உன் வழிகாட்டலின் மூலம் ஒருவன் நேர்வழி பெறுவானேயானால் உனக்கு நூறு சிவந்த ஒட்டகங்கள் கிடைப்பதைவிட அது சிறந்ததாகும் எனக் கூறினார்கள். நபியவர்கள் இச்சிறப்பை அலி (ரலி) அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த காரணமெல்லாம் எப்போதும் மனிதன் ஏனை

யோருக்குப் பிரயோஜனம் அளிக்கக் கூடியவாறு இருக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்துவ தற்காகும் எனக்கூறுகின்றார்கள்.

வேறொரு அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், யார் நேர்வழியின் பக்கம் ஒருவரை அழைக்கின்றாரோ அவர் அதனை ஏற்று பின்பற்றிக் கொண்டிருக்கும் காலமெல்லாம், அவருக்கு எப்படிப்பட்ட நன்மையை அல்லாஹுத்தஆலா வழங்க வேண்டுமென எழுதி வைத்திருக்கின்றானோ அதேபோன்ற நன்மையை அவரை நேர்வழியின்பால் அழைத்தவருக்கும் கொடுக்கின்றான். ஆனால் நேர்வழி பெற்றவருடைய நன்மையிலிருந்து சிறிதளவேனும் குறைக்கப்பட மாட்டாது எனக்கூறுகின்றார்கள். இந்த நபிமொழியும் பிறருக்கு நன்மையளிப்பவைகளை நாம் எப்போதும் செய்துவர வேண்டும் என்பதையே தெளிபடுத்துகின்றது எனக்கூறுகின்றார்கள்.

அதேபோன்று வேறொரு அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், அல்லாஹுத்தஆலாவும், அவனது வானவர்களும் மனிதர்களுக்கு நல்லதைக் கற்றுக் கொடுப்பவர்களுக்காக ஸலவாத் சொல்லுகின்றார்கள் எனக்கூறுகின்றார்கள். மற்றுமொரு அறிவிப்பில் நபி(ஸல்)அவர்கள் மார்க்கத்தைக் கற்றுணர்ந்த அறிஞனது சிறப்பைப்பற்றிக் கூறுகையில், வானத்திலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும், கடலிலுள்ள மீன்களும், எறும்புகளும் மார்க்கத்தைக் கற்றுணர்ந்த அறிஞனுக்காக பிழைபொறுக்கத் தேடுகின்றன எனக்கூறுகின்றார்கள்.

அவர்கள் தொடர்ந்து கூறுகையில், ஒரு வணக்கவாளி மரணித்து விடுவானேயானால் அவனது வணக்கமும் அதற்குரிய நன்மைகளும் அத்தோடு முற்றுப் பெற்று விடுகின்றன. ஆனால் பிறருக்கு பிரயோஜனமளிப்பவைகளைச் செய்துவிட்டு மரணிக்கின்ற ஒருவனுக்கு மறுமைநாள் வரையும் அதன் நன்மை கிடைக்கப் பெறுகின்றதெனக் கூறுகின்றார்கள்.

உலகுக்கு அனுப்பப்பட்ட நபிமார்களையும், இறைத்தூதர்களையும் மனித சமுதாயத்துக்குரிய வழிகாட்டிகளாக அல்லாஹுத்தஆலா அனுப்பும்போது நீங்கள் மனிதர்களை விட்டுத் தூர

மாகியும், துரவறத்திலிருந்தும் என்னைத் தியானித்துக் கொண்டி ருங்கள் எனக்கூறவில்லை. மாறாக மக்களுக்கு நல்லதைச்செய்து அவர்களுக்கு நேர்வழிகாட்டுமாறு கூறியே அனுப்பி வைக்கின் றான். அதனால்தான் நபி (ஸல்) அவர்களோடு வாழ்ந்து வந்த சில தோழர்கள் தங்களை வணக்கத்துக்காக மாத்திரம் அர்பணித் துக்கொள்ள முற்பட்டபோது அவர்களை அவ்வாறு செய்ய வேண்டாமெனத் தடுத்து அனைவருக்கும் பிரயோஜனமான முறையில் வாழுமாறு பணித்தார்கள். நபியவர்கள் ஏன் அவ்வாறு கூற வேண்டும்? மனிதன் தான் மாத்திரம் அல்லாஹ்வின் கட்ட ளைகளுக்கு அடிபணிந்து வாழ்வதைவிட தானும் பிரயோஜன மடைந்து பிறரும் பிரயோஜனம் பெற்றுக்கொள்ளும் வகையில் வாழ்ந்து வருவதே சிறந்ததெனக் கருதிய ஒரே காரணத்தினாலா கும் எனத்தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.

- **சந்தர்ப்பத்துக்குத் தேவையானதே சிறந்த வணக்கமாகும்.**

இவ்வாறு கூறுவோர் நான்காவது கூட்டத்தினராவார்கள். இவர்களது கருத்தின்படி வணக்கங்களில் சிறந்த வணக்கம் எந்த நேரத்துக்கு எவ்வணக்கம் பொருத்தமானதோ அவ்வணக் கத்தில் ஈடுபடுவதுதான் வணக்கங்களில் சிறந்த வணக்கமும், அல்லாஹ்வுக்கு விருப்பமான வணக்கமுமாகும். அதற்குதாரணம் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் ஜிஹாத் செய்ய வேண்டிய தருணம் வந்து விட்டால் இரவுத் தொழுகை, சுன் னத்தான நோன்புகள், திக்ருகள் போன்றவற்றை விட்டுவிட்டாவது ஜிஹாத் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதுதான் சிறந்த வணக்கமாயிருப்பதுடன் இஸ்லாமியனது கட்டாயக் கடமையுமா கும் எனக்கூறுகின்றார்கள்.

அதேபோன்று ஒரு விருந்தாளி வீட்டுக்கு சமூகளித்திருக் கும்போது தனது மனைவிக்கும், குழந்தைகளுக்கும், குடும்பத் துக்கும் செய்ய வேண்டிய கடமைகளையும், சுன்னத்தான திக்ரு களையும் விட்டுவிட்டு அவ்விருந்தாளிக்குப் பணிவிடை செய்வ தும், விழித்துக் கொண்டிருக்கும்போது தொழுதல், குர்ஆன் ஓதுதல், இறைவனைப் பிரார்த்தித்தல் போன்ற வணக்கங்களில் ஈடுபடுவதும், ஒரு மாணவன் தனக்கு தெரியாத பாடம் சம்பந்தப்

பட்டவைகளைக் கேட்கும்போது அதனைக் கற்றுக் கொடுப்பதும், தொழுகைக்காக பாங்கு சொல்லும்போது திக்ருகளை விட்டுவிட்டு பாங்குக்கு விடையளிப்பதும், ஐவேளைத் தொழுகைகளின் நேரங்களில் பள்ளிகள் தூரமாயிருந்த போதிலும் நேரகாலத்துடன் பள்ளிக்குச் சென்று தொழுகையின் கடமைகளை சரிவர பின்பற்றி நிறைவேற்றுவதும்தான் சிறந்த வணக்கமாகும்.

ஒருவன் கடுங்கஷ்டத்தில் இருந்து கொண்டிருக்கும் போது பணம், உடல், அந்தஸ்து போன்றவைகளில் எவைகளைக் கொண்டு அவனுக்கு உதவிசெய்ய முடியுமோ அவைகளைக் கொண்டு உதவி செய்ய முயற்சிப்பதும், அவனது கஷ்டங்களை நீக்குவதும் நாம் தனிமையிலிருந்து அல்லாஹ்வை வணங்குவதை விடச் சிறந்ததாகும்.

மேலும் குர்ஆன் ஓதும் நேரத்தில் தனது உள்ளத்தை ஒருமுகப்படுத்தி அதனது கருத்துக்களை ஆராய்ந்து விளங்கி, அதிலுள்ள சட்டதிட்டங்கள் தனக்குத்தான் கூறப்பட்டிருக்கின்றன என்ற அடிப்படையில் அக்கட்டளைகளை நிறைவேற்ற முயற்சிப்பதுதான் சிறந்த வணக்கமாகும்.

ஹஜ் கடமையை நிறைவேற்றுவோர் ஹஜ்ஜுடைய ஒன்பதாவது தினமான அறபாவுடைய தினத்தில் அறபா மைதானத்தில் ஒன்றுகூடியிருக்கும் போது அல்லாஹ்வைப் பயந்து, அவனது கட்டளைகளுக்கு அடிபணிந்தவர்களாக திக்ரு, பிரார்த்தனை போன்ற வணக்கங்களில் ஈடுபடுவதுதான் சிறந்த வணக்கமாகும்.

ஹஜ்ஜின் பத்தாவது தினத்தில் அல்லாஹ்வை அதிகதிகம் வணங்குவதும், அதிலும் குறிப்பாக தக்பீர் சொல்லிக் கொள்வதும்தான் சிறந்த வணக்கமாகும்.

ரமழான் மாதத்தின் கடைசிப்பத்து தினங்களில் மக்களோடு மக்களாக கலந்திருக்காமல் இஃதிகாப் நிய்யத்துடன் பள்ளியில் தங்கியிருப்பதுதான் சிறந்த வணக்கமாகும். அந்நாட்களில் அவ்வாறு இஃதிகாப் இருப்பதை மார்க்க அறிவையும், குர்ஆனையும் கற்றுக் கொடுப்பதைவிட சிறந்ததாகுமென பெரும்பாலான மார்க்க சட்ட வல்லுனர்கள் கூறியிருக்கின்றார்கள்.

தனது சகோதரனது உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கையில், அல்லது அவன் மரணித்து விட்டால் அவர்களை விட்டும் ஒதுங்கி அல்லாஹ்வை தியானித்துக் கொண்டு இருக்காமல் அவனிடம் சென்று நலம் விசாரிப்பதும், அல்லது அவனது மையித்தில் கலந்து கொள்வதும்தான் சிறந்த வணக்கமாகும்.

மனிதர்களுக்கு கஷ்ட, துன்பம் ஏற்படுகையில் அவர்களை விட்டும் விரண்டோடாது அவர்களுடன் சேர்ந்து அவர்களது கஷ்ட, துன்பங்களில் பங்குகொள்வதும், அவர்களைப் பொறுமையாக இருக்குமாறு ஆறுதல் கூறுவதும்தான் சிறந்த வணக்கமாகும். தனது சகோதரர்களது துன்பங்களில் பங்குகொள்ள அவர்களுடன் சேர்ந்து கொள்ளும் ஒரு இறைவிசுவாசி, அவர்களுக்கு நோவினை செய்யாது அவர்களைவிட்டும் ஒதுங்கி இருப்பவர்களைவிட சிறந்தவனாகும்.

ஒருவன் தனது சகோதரர்களுடன் நல்ல விஷயங்களில் கலந்திருப்பது அவர்களை விட்டும் ஒதுங்கியிருப்பதைவிட சிறந்ததாகும். அதேபோன்று அவர்களது தீய செயல்களில் கலக்காது அவர்களை விட்டும் ஒதுங்கியிருப்பது அவர்களுடன் கலந்திருப்பதைவிட சிறந்ததாகும். அவர்கள் அவ்வாறு தீயவைகளில் ஈடுபடும்போது அவைகளைச் சுட்டிக்காட்டி திருத்தலாம், அல்லது தான் அவர்களுடன் சேர்ந்திருக்கும் போது தனக்கு முன்னால் அவைகளை செய்ய வெட்கப்படுவார்கள், அல்லது குறைத்துக் கொள்வார்கள் என்றிருந்தால் இந்நிலைமைகளில் அவர்களை விட்டும் ஒதுங்கியிருப்பதைவிட சேர்ந்திருப்பதே சிறந்ததாகும்.

எனவே அவர்களின் கருத்துப்படி எல்லாக் காலங்களிலும், எல்லா நேரங்களிலும் எவைகளைச் செய்வதின்மூலம் அல்லாஹுத்தஆலாவைத் திருப்திப்படுத்த முடியுமோ அவை களை அறிந்து செயல்படுவதே சிறந்த வணக்கமாகும்.

இதுவரை கூறப்பட்ட முதல் மூன்று கூட்டத்தினரும் குறிப்பிட்ட வணக்கங்களில் ஈடுபடுவோராவார்கள். எப்போது அவர்கள் செய்யும் வணக்கங்களிருந்து கொஞ்சம் பிரிந்து விடுகின்றார்களோ, அல்லது அவர்களுக்கு அவ்வணக்கத்தை செய்யமுடியா

மல் போகின்றதோ அப்போது அவர்கள் தமது வணக்கத்தை சிறந்த முறையில் நிறைவேற்றவில்லையென்றும், தமது கடமையைச் செய்யாமல் விட்டு விட்டோம் என்றும் தம்மைக் கணித்துக் கொள்கின்றார்கள். அந்த அடிப்படையில் அவர்கள் அல்லாஹ்வை வணங்கும் போது ஒரே வழிமுறையின் பிரகாரமே வணங்கி வருகின்றார்கள்.

நான்காவது கூட்டத்தினரைப் பொருத்தவரை ஒரு குறிப்பிட்ட வணக்கத்தைச் செய்து கொண்டு அதனை ஏனையோரும் பின்பற்றி வர வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் கிடையாது. மாற்றமாக அவர்கள் எங்கிருந்த போதிலும் எவைகளின் மூலமெல்லாம் அல்லாஹுத்தஆலாவின் திருப்பொருத்தம் கிடைக்கின்றதோ அவைகளைச் செய்து அவனது திருப்பொருத்தத்தைப் பெறுவதே அவர்களது தலையாய நோக்கமாகும்.

அதனடிப்படையில் அவர்கள் ஒரே வணக்கத்தில் மாத்திரம் ஈடுபடாது அவர்களுக்குத் தெரிந்த அனைத்து வணக்கங்களிலும் ஈடுபவார்கள். அல்லாஹுத்தஆலாவின் அருள் ஒரு வணக்கத்தில் இருப்பதை அறிந்து கொண்டால் அதனைப் பெற்றுக் கொள்ளும் வரையும், மற்றொரு வணக்கம் கிடைக்கும் வரையும் அதிலே ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

அப்படிப்பட்டவர்களின் சிறப்புகளில் ஒன்றுதான் நாம் அறிஞர்கள் இருக்கும் இடத்துக்குச் சென்றால் அவர்களும் அந்த அறிஞர்களுடன் இருந்து கொண்டிருப்பார்கள். அல்லாஹ்வை வணங்கி வழிப்படுவோரிடம் சென்றால் அங்கேயும் அவர்கள் இருந்து கொண்டிருப்பார்கள். அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்பவர்களைக் கண்டால் அவர்களுடனும் அங்கே இருந்து கொண்டிருப்பார்கள். அல்லாஹ்வின் மாளிகையில் இருந்து கொண்டு அல்லாஹ்வை திக்ரு செய்து வணங்குவோரைக் கண்டால் அங்கேயும் அவர்கள் இருந்து கொண்டிருப்பார்கள். அல்லாஹ்வுக்காக வேண்டி நன்மை செய்வோரைக் கண்டால் அவர்களுடனும் அவர்கள் இருந்து கொண்டிருப்பார்கள். தங்களது உள்ளங்களை ஒருமுகப்படுத்தி அல்லாஹ்வை

தியானிப்பதற்கு ஒதுங்கியிருப்பவர்களைக் கண்டால் அங்கேயும் அவர்கள் இருந்து கொண்டிருப்பார்கள். இப்படியான நிலையில் இருந்து அல்லாஹுத்தஆலாவை வணங்கி வருவோர்களுக்கு எந்தக்கட்டுப்பாடோ, அல்லது எந்தவொரு வரையறையோ கிடையாது. அவர்கள் வணக்கங்களில் தங்களுக்கு விருப்பமான வணக்கங்களையோ, அல்லது தாம் போற்றப்பட வேண்டும் என்ற நோக்கத்திலோ ஈடுபடமாட்டார்கள்.

மாறாக அவர்களது உள அமைதி எதிலிருந்தாலும் சரி தான் தமது நோக்கமே அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற்றுக் கொள்வதாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அனைத்து வணக்க வழிபாடுகளிலும் ஈடுபட்டு வருவார்கள். அவர்கள்தான் இறைவா! உன்னையே வணங்குகின்றோம், உன்னிடமே உதவி தேடுகின்றோம் என்ற வசனம் கூறும் உண்மைப் பொருளை உரிய முறையிலும், அவ்வார்த்தை எதிர்பார்க்கக் கூடியவாறும் நடந்து கொள்பவர்களாகும்.

எனவே அவர்கள் அணியும் ஆடைகள் எவ்வாறிருந்த போதிலும், அவர்கள் உற்கொள்ளும் உணவு எவ்வாறிருந்த போதும், இருப்பிடம் எங்கிருந்த போதிலும், எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் யாருடைய கட்டளையோ, அல்லது விதிமுறையோ, அல்லது வற்புறுத்தலோ இன்றி சுதந்திரமாக அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு வழிப்பட்டு நடப்பார்கள். மார்க்க சட்டதிட்டங்கள் எவ்வாறு வாழ வேண்டும் எனப்பணித்துக் கொண்டிருக்கின்றதோ அந்த அடிப் படையில் வாழ்ந்தும், இறைவா! இதோ என்னை உனக்கு நான் அர்பணித்துவிட்டேன் என்ற கருத்தைத் தெளிவுபடுத்தும் முகமாக வணங்கி வழிப்பட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்கள் இவ்வாறு வாழ்ந்து வருவதால்தான் நன்மையை விரும்புபவர்கள் அவர்களைச் சேர்ந்து நடந்தும், தவறுகளில் ஈடுபடுவோர் அவர்களை விட்டு விலகியும் செல்கின்றார்கள். அவர்களிடத்தில் காணப்படுவதெல்லாம் நன்மைகளாக இருப்பதால் அவர்கள் எவ்விடங்களுக்குச் சென்றாலும் வானத்திலிருந்து பொழியும் மழை

யைப் போன்று மக்களுக்கு நல்லதைச் செய்தும், நல்லவைக ளைக் கற்றுக் கொடுத்தும் நன்மையை ஈட்டிக் கொடுத்தும் வாழ்ந்து வருகின்றார்கள். பேரீத்தம் மரத்திலுள்ள அனைத்துப் பொருட்களைக் கொண்டு மக்கள் எவ்வாறு பிரயோஜனம் பெறு கின்றார்களோ அதேபோன்று அவர்களது சமுதாயத்தினர் அவர்க ளுடைய அனைத்து நடவடிக்கைகளாலும் நன்மையைப் பெற் றுக் கொள்கின்றார்கள். அந்த ஈத்தம் மரத்திலுள்ள முள் எவ் வாறு சிலருக்கு தொல்லை கொடுக்கின்றதோ அதேபோன்று அல் லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்தும், அவன் இட்ட வரம்பு களையும், கட்டுப்பாடுகளையும் மீறியும் நடந்தும் வருவோருக்கு கோபத்தின் மையக்கல்லாகவும் இருந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே இந்நான்கு வழிமுறைகளிலும் இந்நான்காவது வழி முறைதான் சிறந்த வழிமுறையாகும்.

**இறுதியாக.**

அன்பார்ந்த சகோதரர்களே!

இதுவரையும் பார்த்தவைகளிலிருந்து இஸ்லாம் கூறும் இஸ்லாமிய வணக்கங்கள் யாவை என்பதை அறிந்து கொண் டோம். எனவே இஸ்லாத்தின் வணக்கங்கள் என்பது நாம் கரு திக் கொண்டிருப்பது போன்று தொழுகையும், நோன்பும், ஸக் காத்தும், ஹஜ்ஜும், வேறு சில திக்ருகளும், குர்ஆன் ஓதுவ தும்தான் வணக்கம் என்பதில்லை. மாறாக மனிதனது உலக சம்பந்தப்பட்டவைகளாக இருந்தாலும் சரிதான், மறுமை சம்பந் தப்பட்டவைகளாக இருந்தாலும் சரிதான் அவைகளை அவன் செயல்படுத்தும்போது அல்லாவுக்கென்ற தூய எண்ணத்துடன் செய்து வருவானேயானால் அவையனைத்தும் வணக்கமாகும்.

நமது வாழ்க்கை முழுதையும் வணக்கமாக மாற்றி ஈருலகி லும் வெற்றி பெற்ற கூட்டத்திலாக ஆகுவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மனைவருக்கும் அருள் புரிவானாக!

وصلى الله تعالى وسلم على نبينا محمد وآله وصحبه وسلم.

– – அர் அர் – –

# مجــالات

# العبادة في الإسلام

## باللغة التاميلية

إعداد

القسم العلمي في الدار

ترجمة

محمد أنيس صلاح الدين

مراجعة

عبد العزيز شاجهان



Designed By : BAN'AN 012673455

# مجالات
## العبادة في الإسلام

تأليف :
القسم العلمي بالدار

ترجمة :
محمد أنيس صلاح الدين

الرياض - الشفا - هاتف : ٤٢٠١١٣٧ - فاكس : ٤٢٢٨٨٣٧

ردمك : ٩٩٦٠ - ٩٥٤٩ - ٠ - ٠